ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ மகா பாகவதம்

நரகாசூரன்

சண்டை நாடகம்.

இஃது,

திருப்பாப்புலியூர்

முனுசாமி படையாச்சி ஏட்டுப்பிரதி

கொண்டு,

பட்டணம் - ராஜாத்தின முதலியாரால்

சங்கீதவித்வத்துடன் திருத்தி

கைவண்டூர் - துரைசாமி முதலியாரால்

சகல சுதந்தரத்துடன் பெற்று

சென்னை-சூளை

ஜீ. ஆர். பாலைய நாயுடு அவர்கள்

பாலவிர்த்திபோதினி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

இதன் விலை] [அணா - 5.

ரிஜிஸ்டர் காபிரைட்.

ரிஜிஸ்ட்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில் 1867-வது வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவின் 6-வது விதியின் பிரகாரம் இந்நூலை இங்கிலீஷ இலாகாவாகிய மதராசிலும், பிரஞ்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும், காரைக்காலிலும் அடியிற்கண்ட என்பேருக்கு காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் என்னுடைய உத்திரவின்றி ஒருவரும் அச்சிடக்கூடாது. அப்படி அச்சிட்டால் அதனாலுண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

இப்படிக்கு,

கைவண்டூர் - துரைசாமி முதலியார்.
நெ. 60, அண்ணாபிள்ளை வீதி,
சௌகார்பேட் போஸ்ட், மதரூஸ்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

நரகாசுரன்
சண்டை நாடகம்.

விருத்தம்-மத்தியமாவதி.

சீர்கொண்டசெங்கமல வைகுந்தவாசனே
சேனாபதித்தலைவனே
கார்கொண்டரூபனே கவுஸ்துவாபரணனே
காளிங்கமர்த்ததாசனே
கண்ணனேவிண்ணனே விண்ணவர்பணிந்திடும்
காலனேநீலமேக
நீர்கொண்டஅவதாரம் யார்கொண்டுபணிவரோ
நின்பாதமலர்நானம்பினேன்
நித்தபரிசுத்தனே பத்தர்க்குஅன்பான
பரிபூரணரகுராமனே.

விநாயகர் கவி - நாட்டை.

சீதரன்தங்கையான தேவியுமகிழ்ந்துவந்து
பூதலம்புகழ்கெம்பீரன் பூரித்துகும்பிகாந்தன்
காதலிவள்ளியம்மன் கலியாணம்தனக்குகந்த
வேதமாவிளங்கும்ஸ்வாமி விநாயகர்வருகின்றாரே.

தரு.

செல்வக்கணபதி வந்தார் மூஷிகமேறி (செல்வக்)
செல்வக்கணபதிவந்தா தேவரஞ்சலிசெய்ய
வல்வினையகற்றிய நல்ல வாக்குத்தந்தருளிய (செல்வக்)
சாலிமல்லிகைமுல்லை சந்தணக்களபம்வீச
சோதிமுப்புரியாட பூதகணங்கொண்டாட (செல்வக்)
கோலியநல்லாசாலை குலவுமுச்சந்தவாசன்
சூலிமகிழ்ந்தளித்த சோதிமகுடமின்ன (செல்வக்)
பாதத்தண்டைகள்கொஞ்ச பன்னுமறைமுழங்க
மாதவன்திருமகள் மணத்துக்கருள்புரிய (செல்வக்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JUL
MADRAS

கிருஷ்ணன் வருகிற கவி-கலியாணி.

1. உலகமெலாம் ஓரடியாயளந்தபாதன்
   உள்ளமதிலமர்ந்தாடும் திவ்வியநாதன்
2. அலகைமுலைப்பாலுண்ட அனாதிசோதி
   ஆழிசங்கந்தனுவாளும் கதைவாளேந்தி
3. இலகுமணிசாம்பவதி சத்தியபாமை
   இஷ்டமுள்ள அஷ்ட லக்ஷுமியுஞ்சூழ
4. கலகலெனமணிபணிகள் அலங்கரித்து
   கரியகோபாலகிருஷ்ணன் வருகின்றாரே.

த ரு.

தேவகிதந்ததீரன் செகம்புகழுங் கெம்பீரன்
தேவாதி தேவன் நானே.
உலகெங்கும் நிரைந்திடும் பாவைநாசனும் நானே
ஆவலாகவந்து அசோதை வீட்டையடுத்தேன்
அம்மான்வரவிடுத்த தசடனையுமடித்தேன்
அர்ப்புதனானே-ஆதி-தற்பரனானே
சுருள். பொற்புள்ளமன்மதன் தன்னையளித்தேன்
சர்பமீதேறியே நின்றுகளித்தேன் (தேவகி)

புல்லணுகியகம்சன் கொல்லவறவிடுத்த
பூதகி பாலேகுடித்தேன்
அவன்சூதுகள்கடந்த மாகுலந்தன்னேமடித்தேன்
பூவையராட-கவரிகள்-பாவையர்போட
சுருள். ஆவலாய்முனிவர்கள் வேதமும்பாட
மேவியேஅன்பரும் பாதமேதேட (தேவகி)

பஞசாயுத... த்து மிஞ்சியென்னேப்போல்வந்த
பவுண்டிகனே மடித்தேன
வெகுசூரரும்வீரரும் துவண்டுவிழவேமுரித்தேன்
பாசமுங்கண்டேன்-பெண்கள்-நேசமுங்கொண்டேன்
சுருள். வாசவன்முனிவரும் வந்தடிதாழ
ஆசையாய்வெகுவித அரசரும்சூழ (தேவகி)

சத்தியபாமாருக்குமணி சாம்பவதிகாளந்தி
சரசமாதர் ளிலங்க
ஒளிநவமணிபணிகளும் வரிசையுடனேதுலங்க
சல்லரிபாட-வெகு-மல்லரிகூட
சுருள். எத்திசையெங்குமே வாத்தியமிஞ்ச
சத்துருதிகள் கண்டுமேஅஞ்ச (தேவகி)

சத்தியபாமா ருக்குமணி கவி-தோடி.

சங்காழிதனுவாள்தண்டம் தாங்கியேகரவாய்போற்றி
இங்காரகெருடவாகா தேவகிமைந்தாய்போற்றி

கங்காளநீலகண்டாய் களிக்குமைத்துனரேபோற்றி
மங்காமல்கார்க்குமெங்கள் மணவாளாநாதாபோற்றி.

கிருஷ்ணன் கவி-தோடி.

அருமையாய்யெனக்குகந்த அஷ்டபாரிகளாய்வந்த
உரிமையாயிருந்தென்னுளும் உசிதமாய்சுகித்துவாழி
வருமைகள்வந்ததில்லை மாணிக்கதீபம்போலே
பெருமையாயென்பக்கத்தில் பிரியாமலிருந்திடீரே.

வசனம்.

ஆ-ஆ-பிராணவதிகளே நீங்க ளெட்டுபேட்டப ஸ்ரீகளும் ஒருமித்து வாழக்கடவது நீங்கள் பிரந்தயிடத்திலும் வந்தயிடத்திலும் வருமையில்லாத செல்வம் பெற்றீர்கள் அதுவே யெனக்கு மகா சந்தோஷந்தான் மாணிக்கதீபம்போலும் என்னிருபக்கத்தில் வீற்றிரும் பெண்களா.

நாரதர் கவி-மோகனம்.

வேதனுமகிழும்பாலன் விரிசடைமுடியிலங்க
சூதெனுமணுகாஞானி சுருதிகளுணர்ந்தமர்னி
மாதவன்மகிழுமேன்மை மலருடனணிந்துக் கொண்டு
நாதனைக்காண அன்பாய் நாரதர்வருகின்றாரே.

தரு.

வேதவன்மகிழும்பாலன் விண்ணவருலகம்விட்டு
மாதவன்சமூகம்நாடி மாமுனிநாரதர் வந்தனரே.

நீண்டசடையிலங்க நெத்தியில்திருநாமமிட்டு
ஆண்டருளுமாயரிடம் அன்புடன்நாரதர் வந்தனரே.

காவிகாபர்ணமபூண்டு கரத்தில்வீணையையேந்தி
தாவிநடைநடந்து சந்தோஷமாமுனி வந்தனரே.

பத்தியுடன்மகிழ்ந்து பாரிசாதபுஷ்பங்கொண்டு
வெத்தியாய்சிதான்பக்கல் விந்தையாய்நாரதர் வந்தனரே.

நாரதர் கவி-மோகனம்.

ஆணிப்பொன்மணிமுக்காரம் அலங்கரித்தழகில்மிக்க
வாணிக்கிமாமனை மாதவாபாரிசாதம்
பாணிக்குள்ளழகாகொண்டு பக்ஷமாயுமதுபாதம்
காணிக்கையாகவைத்தேன் கைகொள்ளும்பரனேபோற்றி.

நாரதர் வசனம்.

ஸ்ரீஹரி கோபாலசூடாமணியென்தாயாராகிய கமலவாணிக்கும் மாமனுகியும் அடியேனுக்கும் காதாவாகிய விளங்கிவராநின்ற கர்த்தனே நான் தெய்வலோகத்திலிருந்து வந்தேன். அடியேனுக்கு அங்கொரு பாரிசாத புஷ்பம் ஒன்றுகிடைத்தது அதை உமது பாத காணிக்கையாகவைத்து பணிந்தேன் தேவரீரிதைக்கொண்டு திருவுள மகிழ்ந்தருளும் கர்த்தனே.

கிருஷ்ணன் வசனம்.

வாருமப்பா நாரதனே நீ கொண்டுவந்த காணிக்கை யென்ன அதை நான் அங்கீகரித்துகொள்ள மனதாகினேனப்பா நாரத முனிவனே.

நாரதர் தரு.

தாதா கெங்கைபாதா-யிந்த-தருவழகை பாரும்நாதா

கிருஷ்ணன்.

மானே மடமானே-யிந்த-மலர்விந்தை யென்னசொல்வேன்

ருக்குமணி.

அமரர்க் கருள்பாலா-யிதை அன்பாகத் தாரும் மன்னு

கிருஷ்ணன்.

ஆசைகொண்ட யென்கண்ணே-உனக்கு-அளிக்கலாமோ போடி பெண்ணே

ருக்குமணி.

என்னுபிழை கூரும்-எனக்கு-இன்பம் வைத்துதாரும்

கிருஷ்ணன்.

பேதமே ஆகாது-இந்த-பெண்களாலே வரும்வாது

ருக்குமணி.

என்னுசொன்னீர் நாதா-இதை-யெனக்கேதரவேணும் பாதா

கிருஷ்ணன்-கவி.

அந்தணர்ளித்தபாலா அருமுனியானேவாழி
தந்ததுபாரிசாதம் தருவழகென்னுசொல்வேன்
எந்தனுக்கேத்தகண்ணே யின்பருக்குமணியேபெண்ணே
உந்தனுக்கேத்தபுஷ்பம் ஒளிதறசூட்டிடாயே.

வசனம்.

கேளுமப்பா நாரதமுனிவனே யென்னு பயபக்தியுடன் பாத காணிக்கையாக வைத்த பாரிசாத புஷ்பமானது எப்படிப்பட்ட உன்னிதமாக யிருக்கின்றது பாருங்களடி பெண்களா ஆ சந்திர வதனு, ஆ பிராணநாயகி என் கண்ணே ருக்குமணி உன் அழகுக் கேற்ற ஆபரணமானது இந்த பூலோக ஸ்ரீகளிலே நீ சூட்டிக்கொண்டு பார்க்க தகுமிதை உனக்கு மகிழ்ந்தளித்தேன் சூட்டிக்கொள்ளுமடி பெண்ணே.

சத்தியபாமா கவி-நாதனுமக்கிரியை.

நங்கைருக்குமணியேநில்லும் நாமிருவருமிருக்க
மங்கையேயென்னைநீக்கி மலருனக்களித்தபோதே
சங்கையுமடைந்தேன்யானும் தாழ்வுநான்உயர்வாளென்று
தங்கையேயிதையறிந்து தருவையும்கூடலாமோ.

வசனம்.

கேளும்பெண்ணே ருக்குமணி நாமிருவரு மிருக்கும்போது சுவாமியானவர் யென்னை நீக்கி உனக்கிந்த பாரிசாத புஷ்பத்தை தந்தபோது எனக்கு சங்கையுண்டாச்சுது அதேனென்றால் நாமெ ன்னு வடிவத்திலாவது நடக்கையிலாவது குணத்திலாவது அல்

2

லது பாசத்திலாவது அல்லது முன்னடி சாதியிலாவது நீயுயர்ந் தவளென்றும் நான் தாழ்ந்தவளென்றும் இந்த வழக்காளது தீர்ந் தபின்புதான் நீயிந்த புஷ்பத்தை சூட்டிக்கொள்ளவேண்டும் நீஅது வரையிலும் தரித்துக்கொள்ளக்கூடாது ருக்குமணி.

ருக்குமணி தரு-மோகனம்.

என்னடிவழக்குடிபோடி யெட்டநில்லடி-நில்
எந்தனைமரிக்கவந்த தேதுசொல்லடி-சொல்.

சத்தியபாமா தரு.

சொல்லடிஉனக்குமாத்திரம் சொந்தமென்னடி-அடி
சுவாமிக்கிநான்பாரியாகி வந்தேன்முன்னடி.

ருக்குமணி தரு.

முனனேவந்துபேசுவது நீதியல்லடி-வாயை
மூடடியுனக்குதாழ்ந்த சாதியல்லடிபோடி.

சத்தியபாமா தரு.

சாதியாகஉனக்குமணம் செய்யவிருக்க-நீயும்
சுவாமியைத்துடர்ந்துவந்த துந்தன்செருக்கோ.

சத்தியபாமா வசனம்.

கேளடி ருக்குமணி உன்னை உன் மாமனுகிய சிசுபாலனுக்கு நேமித்திருக்க அந்த தருணத்தில் நீ என்னு யென் கணவன் பின் னலே நீந்திவந்தவள்தானே இதை யாருமரியார்களோ அடிபோடி வெழ்க்கங் கெட்டவளே.

ருக்குமணி தரு.

உந்தனைசுவாமிக்கி உந்தன்தந்தைதந்ததும்-இந்த
உலகெலாமரியும்போடி வலியவந்ததும்.

வசனம்.

அடிவாடி சத்தியபாமா சூரியபகவானலே கிடைத்த சமந்தக மணியை உன் தந்தையானவர் தமயனை வீரசேனனிடத்தில் கொடுக்க அந்த யணிந்துக்கொண்டு வேட்டையாட போனபோது அவனை சிங்கங்கொன்றுப்போட்டது அந்த சமந்தகமணியை கொ ண்டுபோய் குகையில் வைத்திருக்க அதை சாம்பவராஜன் கண்டு சிம்பத்தை பாணத்தினல்கொன்று அந்தமணியைக் கொண்டுபோக

அதை யென் நாயகரான கிருஷ்ணதேவர் காடிராஜனுடனே இருபத்தோர் நாள் சண்டை செய்து மடித்து அந்தமணியைக் கொண்டு வந்து உன் தந்தையிடத்தில் கொடுக்க அப்போது உன் தந்தையாகிய சதருசித்து உன்னை வலியமாக கொண்டுவந்து சுவாமிக்கி கொடுத்தது யாருமறியார்களோ போடிபோடி வெழ்க்கங்கெட்டவளே.

சத்தியபாமா தரு.

வந்ததுதெரிந்திருக்க நீயேண்டிவந்தாய்-பின்பு
வந்தவளுனக்குத்தானே மாமர்தந்தார்

வசனம்.

கேளடிருக்குமணி சாம்பவதியும் நானும் சுவாமிக்கு பாரியாளாகிவந்திருக்க உன்தாய்தந்தை பந்துவர்க்கத்தார் ஆருமரியாமல் சுவாமியை நீயேந்திவந்ததும் நமது ராசகுலத்துக்கு அடுக்குமோ அப்படிக்கிருக்க சுவாமியானவர் ஒருபொருளை உன்கையில்கொடுத்தால் அதுஉனக்குமாத்திரம் சொந்தமாகுமா சொல்லடி சேர்ந்து தாலி கட்டிக்கொண்டு வந்த சிமாட்டி போடி போடி வெழ்க்கங் கெட்டவளே.

ருக்குமணி தரு.

மலர்குடுத்தபணவாளன் சொன்னதுதாண்டி-என்னு
வழக்கிட்டாலும்புஷ்பத்தை நான்தருவேனோபோடி.

வசனம்.

கேளடி சக்காளத்தி சுவாமியானவர் மனமகிழ்ந்து எனக்கொன்று கொடுக்க அது எனக்கேசொந்தம் உனக்கொன்று தருவாரானல் அதுஉனக்கே சொந்தம் அதுதெரியாதா வம்புக்காரி இந்த பேராசை உனக்கிருக்கலாமோபோடி.

சத்தியபாமா தரு

உன்குலத்தைபழுதாக்கி வந்தசிரிக்கி-புஷ்பம்
உன்னதென்று சாதிக்காதேகொண்டைகுலிக்கி.

வசனம்.

கேளடிருக்மணி ஒருவர்பின்னாலே வந்துவிட்டால் குலப்பழுதென்றென்னமல் வந்தவளானபடியினாலே உன்னிடம்தந்த திவிய

புஷ்பத்தை உனக்கேசொந்தமென்று குலுக்கி சிரிக்கி கெட்டுப்போ காதே அந்தப்படியேயிரடி.

ருக்மணி கவி-ஆனந்தபைரவி.

அந்தமட்டிலிருந்திடாமல் வம்புசெய்திடவந்தேனே
கட்டிலைதிருப்பினாலும் கால்வேறேவென்றெண்ணாமல்
கிட்டியேவழக்குண்டாக்கி கேள்வனுமளித்ததாலே
தட்டியேபரிக்கவந்த தண்ணிப்பால்பாலுண்டேனே.

வசனம்.

சத்தியபாமா என்மட்டிலேயிராமல் உன்னிடத்திலெதுக்கவா வந்தேன் சாம்பவதிகாளந்திமுதலானசக்காளத்திகளிருக்க அதிலே நீமனம்பிடியாமல் தலைகீழாய் கால்மேலாய் துள்ளிப்போகிறாய் கட்டிலைதிருப்பினால் யென்பதுதெரியாமல் என்னைக்குரூரமாகப் பேசி நாயகன்எனக்குத்தந்தபாரிசாதமலரைவேண்டிகிட்டிபரிக்கவந்தால் நானுனக்குத்தண்ணிபால்குடித்தவளல்லஅடிபோடியெட்டவில்லடி.

சத்தியபாமா தரு-மோகனம்.

கெட்டிக்காரத்தனம் பேசாதே—தருவை
விட்டுப்போவேனென்று வீசாதே
பட்டிப்போலேவார்த்தை கொட்டிக்குலைக்காதே
பற்றிச்சடையைக்கையால் சுற்றிக்கொண்டேன்வாடி. (கெ)

ருக்குமணி தரு.

குப்பிசடையைபிடித்தேன் யிராதே—என்னை
சுல்பமாகயெண்ணி பாராதே
இப்போதுமுன்னிட யெண்ணத்தையரிவேண்டி
இருமாப்படைந்துமுன் பெருமைக்கொண்டலையாதே. (கு)

சத்தியபாமா தரு.

கணவன்கைவருமென்று மலைக்காதே—சும்மா
கண்டித்துஉன்வார்த்தை நிலைக்காதே
மணவாளன்வந்திங்கே மரித்தாலும்விடுவேனே
வண்டச்சிரிக்கிவுன்னைக் கண்டிருப்பேனேடி. (கண)

ருக்குமணி தரு.

அலுக்கிகுலுக்கிவந்து நீட்டாதே—வுந்தன்
அதிகாரவீரத்தை காட்டாதே

குலைக்கும்நாய்வேட்டைக்கி கூடாதென்றேசொல்லை
கொஞ்சமுமறியாமல் மிஞ்சிநீபேசாதே. (அலுக்)

சத்தியபாமா தரு-தர்க்கம்.

என்னடிவீசுறாய் சிரிக்கி அடிசிரிக்கி
ருக்கு. எதுத்தேண்டிபேசுறாய் முருக்கி அடிமுருக்கி
சத்தி. கொண்டையருப்பேண்டி குலுக்கி அ[illegible]லுக்கி
ருக்கு. கூந்தலைவைப்பேனே பலுக்கி அடிப[illegible]க்கி
சத்தி. மாராக்கைதொட்டேனே சிரிக்கி [illegible]டிசிரிக்கி
ருக்கு. மடிபிடித்தேன்வாடி முருக்கி அ[illegible]முருக்கி
சத்தி. எப்படியடித்தேண்டி தாடையில் அடிதாடையில்
ருக்கு. எதிரிட்டடித்தேண்டி பாதகி அடி[illegible]

பொது-வசனம்.

இப்படியாக யிருவருக்கும் சண்டை போ[illegible]பாது கிருஷ்ணமூர்த்தி சொல்வது.

கிருஷ்ணன் தரு-மோகனம்.

வேண்டாமடி சண்டை வேண்டாமடி

வேண்டாமிருவருக்கும் ஆண்டவன் நானிருக்க
தூண்டாமணிவிளக்கே தாண்டி மயிர்பிடிக்க (வேண்)

சத்தியபாமாஉனக்கு புத்தி கொஞ்சமில்லையா
அத்துமீரியேமயிர் பற்றி யிழுத்துக்கொள்ள (வேண்)

கண்ணேருக்குமணியவள் வண்ணத் தருவைகேட்டால்
பெண்ணேபயமில்லாமல் பெண்ண மத்துநீபேச (வேண்)

கதைகத்துமழிந்துயிர்த செகத்தி லுள்ளவர்க்கெல்லாம்
நகைப்புக்கிடமுண்டாக பகைத்து யிப்படிபேச (வேண்)

கிருஷ்ணன் கொச்சகம்.

மானேகருங்குயிலே மாமயிலேலாஞ்சிதமே
தேனேயெனக்குகந்த தெள்ளமுதேபாவைரதி
நானேமலரளிக்க நம்மையெதித்தேண்டிசண்டை
தானேநடத்துவதும் தர்மமாயாமிதுவே.

85834

வசனம்.

ஆசந்திரவதனு ஆபென் பிராண்நாயகி ஆசத்தியபாமா ஒருத் தாரம் கேளும் நீவடபாலும் ருக்குமணி யிடபாலும் நாம் நடுவிலிரு க்கநாரதமுனிதந்த பாரிசாதபுஷ்பத்தை யென்து அஸ்த்தத்தில் வா ங்கி பார்வையிட்டு முன்பின் யோசிக்காமலும் கள்ளங் கபடமில்லா மலும் கைவாட்டமாக யிருந்த ருக்குமணியிடம் தந்தேன் அது யாராலே குற்றமென்றால் அது யென்னாலே குற்றமாயிருக்கிரது அப்படி யிருக்க நீ யென்னிடத்தில் சண்டைசெய்யாமல் அவளு டனே சண்டைசெய்வது தர்மமா அதையரிந்து, ஓர்முர்தவசனம் சொல்லும் பெண்ணே என்னடி ஒரு நாழிகையாக வொன்றும் பதில் வசனிக்காம லிருக்கிறாய் யென்கண்ணே.

கிருஷ்ணன் தரு-சுருட்டி.

பேசாதிருப்பதென்னடி அடி மாமதியே
சத்திய பாமதியே பெண்ணே (பேசா)

வீசாதுவீசுமலர் வெகுவா கிட்டாதேவென்று
ஆசைபாசத்துடனே அழைத்து முத்தந்தாராமல் (பேசா)

அஞ்சுகமேமயிலே அமுர்த றஞ்சிதக்குயிலே
வஞ்சகமெண்ணுவேனோ வாமம் யென்மீதில்வைத்து (பேசா)

பரிவாகருக்குமணிக்கும் பாரி சாதத்தருவை
தருவதெப்படியென்று தயங்கி மயங்கினீரோய் (பேசா)

ஓதடிவாய்திறந்து உனக்குமெனக்குமென்ன
பேதமுண்டோகாணும் பெண்ணே கண்ணேயென்னடி (பே)

கிருஷ்ணன் ஜீசபத்தியம்-ஆனந்தபைரவி.

இதுவென்னவர்மமோ யிதுவென்னதர்மமோ
என்னிடம் நாரதர்தந்தபுஷ்பம்
அதுவென்னஅரிதாமோ அதுவென்னபெரிதாமோ
அளிக்கவும் உனக்குமேஆசையாகி
மெதுவாதயிப்பவே நிதம்நிதம்கூட்டவே
விருப்பமுன் மீதினில்யிருப்பதாலே
குறவென்னவாதமோ மதனமாயிருப்பது
கொஞ்சமுமிரங்காத நெஞ்சமிதுவோ

பதியென்னமதியிது வதனமதியோ
ரதியென்னரதியுந்த னெனினவடிவும்
எதிருகவந்துமே யின்பயிடவும்
சதியென்னுசெய்தேனோ சத்தியபாமா.

கிருஷ்ணன் தரு-கன்னடா.

பேதமா ஓ ஓ யென்மேல் பேதமா
சத்தியபாமா பேதமா அடிபெண்ணே கண்ணே (பேத)
பேதமோமலர் பாரிசாதமோ அரிதென்று
வாதமாகவே அஞ்சிக் குரோதம் பேசாதேமனம் (பேத)
அம்புஜமேருக்குமணி அவளுக் களித்தபுஷ்பம்
இன்பமிருந்தாலது யெனக் கரிதோகிடைக்க (பேத)
பஞ்சவர்ணகிளியே பாரும் மகிழ்ந்தென்னுடன்
கொஞ்சும்ரஞ்சிதமானே குத்தம் வைக்காதென்மீது (பே)

வசனம்.

ஆ மிருகேந்திரி ஆ சத்தியபாமா உனக்கும் எனக்கும் பேதக முண்டோ நான் வஞ்சகமில்லாமல் செய்துவிட்ட காரியத்தை குற்றம் பாராட்டலாமா சொல்லடி யென்னிரு கண்ணே.

சத்தியபாமா கொச்சகம்.

மாதவரேசிதறரே வஞ்சியரொல்லாமிருக்க
போதருவைருக்குமணிக்கி பொங்கமுடனேயளித்தீர்
பேதமதுசெய்துமெயண்ணி பேசவந்தீர்நல்லவருய்
ஆதலினாள்நாலாரு அந்தமட்டிலேயிருப்பீர்.

வசனம்.

ஆ ஆ சுவாமி நாங்கள் யெட்டுபெட்டப ஸ்ரீகள் சூழ்ந்திருக்க பாரிசாதபுஷ்பத்தை யெங்களை நீக்கி அந்த ருக்குமணிக்கு தந்த படியினாலே இனி நாங்களாரு தாங்களாரு அந்தமட்டிலே நில்லும் நில்லும் வஞ்சகரே.

கிருஷ்ணன் தரு-கலியாணி.

எந்தன் அருகில்வாடி பாமா-மலர்
தந்தேனென்று கோபிக்கலாமா

அந்தருக்குமணிதன்னை உந்தனுக்கதிகமாய்
எந்தன் மனமரியவே சிந்தைநான்வைத்திருக்க (எந்தன்)

சத்தியபாமா தரு.

கனவன்கருத்தை யரிந்தாளே—எங்களை
கடிந்துபேசயேசவுந் தெரிந்தாளே
துணைவநல்லனோவுந்தன் குணமுநான் அரிந்தேனே
மணவாளனேயிப்படி துணிவுபேசாதே போம் போம் (கண)

கிருஷ்ணன் தரு.

குற்றமதி லேதடிமானே-உந்தன்
சித்தமிறங்கிவாடி தேனே
உத்தமசத்திருசித்து பெத்திடும்சத்தியபாமா
ஒத்துமேவாழ்ந்திருப்பது மெத்தநலமாகுமே (குற்ற)

சத்தியபாமா தரு.

எங்களையிகழக் கொண்டீரே-அவளை
பொங்கியே மகிழ்ந்துக்கொண்டீரே
மங்கையவளைகூடி பொங்கமாய்விளையாடி
அங்கேயிருந்திடும்போம் இங்கேவந்துமேசொன்னது (எங்க)

கிருஷ்ணன் தரு.

பயித்தியம் சந்திரவடிவாகிய சததியபாமா-பயித்தியம்
தயவுவையென்மீதில் வர்மம்வேண்டாம் (சத்தியபாமா)

சத்தியபாமா தரு.

சுந்திரகெம்பீருசொல்ல யெங்களைநீக்கி
தோகைக்கிதந்தது நன்மைதானோ (சுந்திர)

கிருஷணன் தரு.

அந்தரமேரியே மந்தாருவிருக்ஷத்தை
அளிப்பேனான்வேரோடு அஞ்சவேண்டாம் (அந்தர)

சத்தியபாமா தரு.

மந்திரகிரிதாங்கிய மாதவாயிது சத்தியம்
மாருமாயிப்போது சொன்னவுருதி. (மந்திர)

கிரு. சந்தேகமில்லாமல் தருகுவேனே
சத்தி. எந்தன் மனதிஷ்டைப்படவில்லையே
கிரு. விந்தையென்னிருகையை தந்தேன் தந்தேன்
சத்தி. சிந்தைமகிழ்ந்தேனே தேவா தேவா

பொது வசனம்.

இப்படியாக சத்தியபாமைக்கி பாரிசாதவிருக்ஷத்தைக்கொண்டு வந்து தருவதாகசொல்லி அபயஸ்தம்தந்து யிருக்க அந்த சமயத்தில் சொர்க்கலோகத்துக்கு அதிபதியாகிய தேவேந்திரமகாராஜன் கொலுவுக்குவருவது,

தேவேந்திரன் விருத்தம்-சங்கராபரணம்

தேவர்கள்முனிவர்கின்னர் சித்தர் கெந்தருவர்சூழ
பாவையர்வசைகளாட பணிமணிமகுடம்பூண்டு
காவலர்காங்குவிக்க கனவச்சிரவாளியேந்தி
மாவெகுவதனயிந்திரன் மகிபதிவருகின்றாரே.

தரு.

நாகத்துக்குமதியொத்த மேகத்துக்குஅதிபதி
நவிலுமிந்திரன் நானேபொன்னகருக்கழகிய
வாகுத்தபுஜகீர்த்தி மணிமகுடமுமின்ன
சுரு. மங்களபேரிகை சங்கமும்பூரிகை
பொங்கியநனைமுக சிங்கமுமென்ன. (நாக)

கெந்தருவர்முனிவர்கெருடகெம்புருடரும்
வந்திருபுரத்திலும் வானவரும்பணிய
சுரு. வச்சிறபடைகர உச்சிதம்பெரிகிட
மெச்சிடமூவரும் கச்சிதமாக. (நாக)

கற்மகபாரிசாதம் கனகமணிமாலையும்
பொற்புள்ளநவரத்தின பூஷணங்களிலங்க
சுரு. பூங்கிளிமாதரும் தாங்கியகவுரிகள்
ஓங்கியேவீசவும் பாங்கழகான. (நாக)

கோலியநல்லூர்சாலை கூரும் வன்னியகுலமனனர்
சீலரங்கையன்தந்த சேயன் கிருஷ்ணசுவாமியின்
சுருள். செப்பவுமிக்கதை ஒப்புடன் அருள்தரும்
தப்பிலாமாதவர் நற்பதமோதியே (நாக)

தேவேந்திரன் கவி-மோகனம்.

மருமலர்காமதேனு வானவர்முனிவர்கின்னர்
திருநகர்தன்னிலுள்ள தேவகன்னியருமிக்க
தருமமேடெருகயென்றும் தழைத்தோங்கிவாழ்ந்துநிற்கும்
குருமுனிபாதம்வணங்கி கொலுவினிலிருக்கின்றேனே.

வசனம்.

கேளும்- மந்திரியாகிய மாதலி நமது தேவலோகத்தி லுண்டாகிய தேவர் முனிவர் முதலான யாவரும் காமதேனு கற்பக விருக்ஷம் முதலானதும் மேலாக தழைத்தோங்கி வரும்படி பரம சிவத்தை தியானித்து வராநின்ற குருவாகிய பிரகஸ்பதி பகவான் அவர் பாதார கமலங்களுக்கு! அனேக நமஸ்க்காரம்.

பொது-வசனம்.

இப்படியாக தேவேந்திர மகாராஜன் சபாவாகிய கொலுவுக்கு வரும்போது அந்த சமயத்தில் பராக்கு ஜோதிடபட்டணம் ஆளா நின்ற நரகாசூரன் கொலுவுக்கு வருகிற விதங்காண்க.

நரகாசூரன் தரு-மோகனம்.

1. தேவர்களும்முனிவர்களும் நடுநடுங்க
சித்திரமணிமகுடம் பளபளென்ன
2. பாவையர்கள்இரு புரமும்கவரிவீச
பம்பைமணிமுரசு டங்காபேரிபாட
3. காவலரும்நெரிங்கிடவே சிலைவாளேந்தி
கரிபரியும்சேனை ரதம்பரவிசூழ
4 ஆவலுடன்கொலு நாடிநரகாசூரன்
அகிலமெலாம்நடுநடுங் கிடவேவருகின்றானே.

தரு.

வீரநரகாசூரன் வந்தானே சூராதிசூரன்
வீரநரகாசூரன் வந்தானே

வீரநரகாசூரன்மீரவே விருது
பேரிகைமுரசு முழங்கிடவே
தேருங்கொடிகளும் பேரும்பெரிய
ஆருமெதிரில்லா தீரமிகுதிய (வீரநரகா)
அண்டரும்பயந்திடவே இவரைக்கண்ட
துண்டரும்பயம் வகுத்திடவே

சண்டனு மதிமயங்க கொண்டுமே நடுநடுங்க
எண்டிசை மனதுவாட குண்டலஞ் செவியிலாட (வீரா)

வச்சிரக்கவசந் துன்னவே மணி யிழைத்த
உச்சித மகுட மின்னவே
அச்சுதன் மனங்களிக்க துற்சன ரோடியொளிக்க
கச்சித மாந்தர்களாட மெச்சவே கவரிபோட (வீரா)

சூலமுய்கரத்தி லோங்கிடவே தனுவாள் தண்டம்
வேலுடன் பாலாவுந்தாங்கிடவே
ஆலமுண் டருளுமீசன் ஞால மதிகலங்க
கோலகாலனுந்தேரி சாலமில்லாமல்மீரி (வீரா)

நரகாசூரன் கவி-கமாசு.

அசைவிலாமுறனேமந்திரி அடவானஅஷ்டதிக்கும்
விசயமேசெய்துதேவர் விருதுகள்தனையடக்கி
பிசகிலாதழகுலக்ஷம் பெண்களைசிரைபிடிக்க
திசையெலாமறியநானும் திருமணம்புரிகுவேனே.

வசனம்.

கேளும் எனது மந்திரியாகிய முறகாசூரனே அஷ்டதிக்குவிஜயஞ்செய்து தேவர்களை யடக்கிவைத்து எனக்குவிவாகம் செய்தவன்சூரன் கெந்தருவன் குமாரத்தியாகிய சரசவிலோசனி தவிரலக்ஷம் ஸ்ரீகளை சிரைபிடித்து வந்துசேர்த்து திருமணஞ் செய்துக் கொள்ள எண்ணங்கொண்டு மகிழ்ந்தேன் இவ்விதமாக நடத்துவோம் வாரும் எனது மந்திரி மார்களே.

நரகாசூரன் தரு-மோகனம்.

அஷ்டதிக்குவிசை யஞ்செய்ய—வந்தேனே
அண்டபுவனமும் கண்டுநடுங்க
துஷ்டர்களை மதமடக்கி—நானும்
துண்டன்யெமனுடனே தண்டமும்பெற்றேன்
கண்டேனே வருணனையும்—அவனிட
கண்பொரிகலங்கவிட்டு வெண்குடைபெற்றேன்
அண்டாதகோபமுடனே—அளகையை
அண்டிஅவன்பவள தண்டிகைபெற்றேன்

நிருதிஅக்கினிவாய்வு—நடுங்கவே
நில்லாமலங்கங்கே வல்லமைகாட்டி
விருதுகள் தனை பரித்தேன்—யென்னுடைய
வீரியம்தனைசெலுத்தி மீரிநடந்தேன்
சந்தோஷம் பெருகிடவே—ஓங்கியே
தட்டியிருகரத்தைக் கொட்டிநகத்தேனே
வந்தேனே தேவபதிக்கி—நடுகியே
மாதரைசிரையெடுக்க வாதுநடக்க.

அஷ்டதிக்கு பொது-வசனம்.

இப்படியாக நரகாசூரன் தெய்வலோகம் வந்து அதாகுதம் செய்ய தேவபடையுடனே தேவேந்திரன் யெதிர்ந்துச் சொல்வது காண்க.

தேவேந்திரன் கவி-தோடி.

முக்கியே சேனை தன்னை முன்னும் பின்னிருந்திடாமல்
துடிக்கின்ற நறகாவுந்தன் சூரத்தைதிறமா யெண்ணி
பிடிக்கவும் பெண்கள்தன்னை பெருங்கோபத்துடனேவந்து
மடிக்கவும் தனுவெடுத்தேன் வல்லுயிர்பிழைத்திடாயே

வசனம்.

அடாநரகாசூரு சேனைகளை யெச்சரித்து முன்னும்பின்னரியாமல் தேவஸ்ரீகளை சிரைபிடித்தா யல்லவா உனது வல்லமை நிலைநிற்கமாட்டாது இதோபெருங் கோபத்துடனே ஆயுதமெடுத்து யெதிர்த்துவந்தேன் ஆதலால் இந்தவேளை தப்பித்து உயிர்பிழைத்து போடாசூரனே.

நரகாசூரன் தரு-மோகனம்.

தேவயிந்திராவாடா எந்தனைவெல்ல தீரமேதடா போடா
தாவும்யிந்திரலோகம் தனையெல்லாம் அதமாக்கி
தண்டித்துப் பெண்களைக் கொண்டுபோகவந்தேன் (தேவ)

தேவேந்திரன் தரு.

சூரநரகாவாடா யுந்தனைமீரி தூக்கியெரிவேன் போடா
வீரமாகவந்து வீண்வார்த்தை பேசாதே
வெட்டியெரியவுன்னை அட்டி யெந்தனுக்குண்டோ (சூர)

நரகாசூரன் தரு.

ஆலகாலமாக யென்னைக்கண்டு அண்டரெல்லாம் நோக
காலகாலனாக கண்டித்து வுங்களை
கன்னியைக் கைக்கொள்ள உன்னைமதிப்பேனோ (ஆல)

தேவேந்திரன் தரு.

மோடிப்பேசலாமோ எங்களிட வீரியம்பழு தாமோ
நாடியவெவ்சூரர் நலங்கெட்ட தரியாமல்
நானேவீரனென்று வீணாகநீ மடியாதே (மோடி)

நரகாசூரன் தரு.

சூராதிசூரனாலே அடிப்பட்டு கொண்டுசெய்தத் தாலே
தீரமெனக்குண்டு வேடிக்கை நீபேசாதே
விட்டேனே ஒருகணை கெட்டுமுரிந்தோட (சூராதி)

தேவேந்திரன் தரு.

காதகாகமோடா உங்களையெல்லாம் கண்டிக்கவகை தேடா
வாதைசெய்யும்பாணம் வரவிட்டேன் பாரடா
வதைத்தேனே யெங்களை யெதிர்த்தபேரையெல்லாம் (காத)

நரகாசூரன் தரு.

அமரரெல்லாம்வாட துண்டமாய் அடித்தேனேமுரிந்தோட
குமருமிடியைப்போலே கொண்டொருபாணத்தாலே
கூட்டமழிந்தோடவாட்ட வந்தேனேபாரும் (அமா)

தேவேந்திரன் தரு.

தாண்டி குதிக்காதேயிங்கேவந்து தலைதுள்ளிபோகாதே
தூண்டிஒருகணை துண்டிக்க தண்டிக்க
சூறமுண்டியிந்தவீரங்கள்பேசாதே (தாண்டி)

கந்தார்த்தம் நரகாசூரன்-மோகனம்.

அடித்தானேதேவரோட அத்திகுண்டலமும்பெற்று
இடித்தானேயெதிர்த்த பேரையிலகியமணிகூட்டத்தை
பிடித்தானேபெண்கள்தன்னை பெருமையாய்வந்தயெண்ணம்
முடித்தானே நகரம்னோக்கி.

நரகாசூரன் தரு-சுருட்டி.

முடிகிடப்போம்மந்திரி செயபேரிட்டு கடிகிடப்போம் மந்திரி
வடிவில்மிகுத்தயிந்த வானுலோகத்தைவிட்டு
வந்தோம் நம்துதேசம் சந்தோஷம் பெருகியே (முடிகி)

வசனம்.

இவ்விதமாக தேவர்களை பரக்கடித்து அத்திதேவி மணிகுண்டலமும் பரித்து இந்திரதேவன் அழகாக வைத்திருந்த மணிகூடகிரியையும்கைகொண்டு தேவலோகம்விட்டு தனதுபட்டணம்வந்து தான்கொண்டுவந்த கன்னிகைகளை மணிகூட சிரையில்வைத்து நாள்தோறும் பெண்களை சேர்ந்துவர இந்திரதேவன் வாடி துவாரகாபுரியில்வந்து தனது குரையை கிருஷ்ணதேவரை வணங்கி சொல்லி மூறையிட்டுவருகிறவிதங் காண்க.

தேவேந்திரன் கந்தார்த்தம்-மோகனம்.

துலங்குந்தேவர்கள்பறுக்கு சோதிடநரகாசூரன்
கலங்கவேவுலகமெலாம் கன்னிகள்தன்னையெங்கும்
புலங்கயமாயனுக்கு போதித்துமனங்களித்து
நலங்களை தேடவேண்டி.

தரு தர்ப்பார்.

நடப்போம்வாரீர் துவாரகைக்கி நடப்போம்
நடப்போம் நகரைவிட்டு ராமகிருஷ்ணனைக்கண்டு
அடிப்போம் நரகாசூரன் அவன்மதமடக்கவே (நடப்)

வசனம்.

கேளும் தேவமுனிவர்களே பராக்கு சோதிட பட்டணம் ஆளாநின்ற நரகாசூரனேவந்து தேவலோக முதலானதும் வந்து உலகத்திலனேகம்பெண்கள் அவாளை சிரையெடுத்துக் கொண்டு போய் மணிகூட பர்வதசாரலிலே வைத்திருக்கிறபடியினலே அவன் துன்பத்தை மாத்தும்படியாக யாவரும் தெய்வலோகத்தை விட்டு துவாரகாபுரிக்கிவந்தோம் கிருஷ்ணதேவருடைய திருவடிகமலங்களுக்கு முரையிடுவோம் தேவர்களே.

தேவேந்திரன் தரு-ஸ்ரீராகம்.

மாயவாவுந்தன் மலரடிக்கேசரணம்
மகிழுந்தொருவிண்ணப்பம் கேளுமையா (மாயவா)

நாயகா அந்த பறுக்குசோதிடமாளும்
நரகாசூறனே வெகுபலசாலி (மாயவா)
அண்ணடம்வந்து பெண்களைபிடித்துமே
அவனதுநகருக்கு கொண்டுபோக (மாயவா)
அதனாலே தடைசெய்ய முடியாது
அடியவர்மயங்கி வந்தோம்பரந்தாமா (மாயவா)

தேவேந்திரன் வசனம்.

கேளும் கர்த்தனே லக்ஷம் பெண்களை சேர்த்து விவாகம்செய்துக் கொள்ள யெண்ண முள்ள வனும் நாள்தோரும் தேவலோகம் வந்து ரூபலாவண்ணியம் பொருந்திய பெண்களை பிடித்துக் கொண்டு போகாநின்ற நரகாசூரன்துன் பத்தை மாற்றி ரக்ஷிக்கவேண்டும் கர்த்தனே.

கிருஷ்ணன் கவி-சமாசு.

தேவயிந்திரனேவாழி திரமொடு நரகாசூரன்
கேவலங்கண்டிப்பே நான் கெலிப்புடன் யிருப்பீர் நீங்கள்
ஆவலாய் முன்புசொன்ன அழகிய தருவளிக்க
போவது சத்தியமாக பூரித்து அனுப்புவாயே.

வசனம்.

கேளும் தேவேந்திர மகாராசனே அந்த நரகா சூரனைக்கண்டித்து உங்களிடுக்கத்தை மாற்றிரக்ஷிக்க மனதாகினேன் சந்தோஷமாய் தங்கள் தங்கள் இருப்பிடம்போய் சேருங்கள் தேவர்களே.

கிருஷ்ணன் வசனம்.

ஆ-ஆ-வாரும் பெண்ணே சத்தியபாமா உனக்கு முந்தி சொன்ன வாக்கியப் படிக்கி பாரிசாத புஷ்பம் தருவிக்கக்காலம் வந்தது இப்போது நரகாசூறனை செயம் பெற்று தேவபதிக்கி சென்று வரும்படிக்கி மனதாகினேன் நல் வாக்கு தந்தனுப்புவாயடி பெண்ணே.

சத்தியபாமா தரு-தனியாசி.

சஞ்சலமில்லாமல் வஞ்சிநான்வந்திட
நெஞ்சுமகிழ்ந்திடு வீர்சுவாமிநாதா.

கிருஷ். ஆடுமயிலன்னமே மோடியென்னுடன்
கூடிவந்திடலாமோ கோமளாங்கி.

சத்தி. உன்னிதமுடன்கூடி கன்னிநான்வந்திட
உள்ளமகிழ்ந்தேனே சுவாமிநாதா.

கிருஷ். சண்டைக்குஆரம்பம் கொண்டிங்கேபோகவும்
பெண்டங்கேவரலாமோ பேசுமானே.

சத்தி. வல்லமையில்லாதமெல்லி நானல்லவோ
எல்லாமரிந்தயெந்தன் பிராணநாதா.

கிருஷ். அன்னமேயிதுவென்று சொன்னமொழிகேளாமல்
என்னடியிந்தவீரம் பேசலாமோ.

சத்தி. இந்தரபதிவிந்தை சுந்தரியரிந்திட
சிந்தைமகிழ்ந்தேனே தேவாதேவா.

கிருஷ், செப்பியபடிநீயும் வொப்பினேன்வந்திட
இப்பவேயேகுவோ மேயின்பரசமே.

வசனம்.

வாரும்பெண்ணே சத்தியபாமா உன்மனதின்படி யென்பின்னேவருவதாக மகிழ்ந்தேன் நாமிருவரும் பாக்குஜோதிடப்பட்டணம்நாடி நடப்போமடி பெண்ணே.

கிருஷ்ணன் தரு-சுருட்டி.

அன்னமேநீவாடி சத்தியபாமா அஞ்சுகமேகூடி
சொர்ணமணிசித்ர கெருடன்மீதேரியே
சூரியன்போலவே வீரியமாகவே (அன்னமே)

சத்தி. சிங்காரமாய்வதனு சுவாமிநாதா தேவகியாளசுதனு
சங்காறருத்திரிசகோதரி சந்தோஷமாய்
போகவந்தேன் மனதாக. (சிங்கார)

கிருஷ். தங்கமேநீவாடி வனவிந்தையிங்கிதமேபாரும்
எங்குமிருகங்கள்வாழும் வனங்கண்டோம்
எப்படிநரகாசூரன் பட்டணங்காணுது. (தங்க)

சத்தி. உச்சிதமேமாயா மேகவர்ணு அச்சுதனேநேயா
பச்சபுரவியை பறவியகோபுரம்
பாரும்வெகுவிந்தை கூறமெளிதல்ல. (உச்சி)

கிருஷ்ணன் வசனம்.

கேளும் பிராணநாயகி நமது துவாரகாபுரியைவிட்டு பராக்கு சோதிடப்பட்டணம வந்து கண்டோம் இந்த சிங்காரத்தோப்பில் வந்திறங்கி யிளப்பாரினோம் இனிசும்மா யிருக்கப்போகாது நமது கெருடபகவானை வரச்செய்யும் பிராணநாயகி.

கெருடன் கவி.

தேசுகிகுளிகன் தக்கன் வல்லகார்க்கோடநமரம்
தேசுகிஅரமெல்லாம் திடுக்கிட்டுநடுநடுங்க
பேசேசுகிவதனதீரன் மதிர்படஅண்டாண்டம்
வீசுகிவதனதேயன் வீரியன்வருகின்றானே.

தரு நாதனுமகிரிகை.

கண்டகாசிபன்தந்த அண்டஜம்தன்னில்வந்த
கெருடபகவான் வந்தாரே.
நல்லவாசவன்பணிந்திடும் கேசவன்முன்னே. (கெருட)

சண்டமாருதமென்ன தாண்டிவீசிப்பாந்து
சுரு. சகலலோகமும்கண்டுநொடிக்குள்ளே
புகலவந்திடும்புஜபலதீரன். (கண்ட)

இந்திரவாலுக்கொரு இரகையிரைகொடுத்து
தந்தமும்ரதகெஜங்கள் தமையன்மாருக்களித்து
சுரு. தாயாறடுமை நீக்கியலோலன்
மாயன்மெச்சிய மகிழ்குணசீலன் (கண்ட)

அஷ்டநாகமெல்லாம் அஞ்சிநடுநடுங்க
பக்ஷமாஆதிமாயன் பகரும்விதமரிய
சுரு. பாரியமணிமுடிபணி காருமின்ன
கூரியதிருவ தண்டைகள்கொஞ்ச (கண்ட)

வாளும்கட்டாரிபால வடிவுதண்டமும்வில்லும்
தோலுங்கறமிலங்க துண்டவீரர்நடுங்க
சுரு. சுத்தன்பரும் பணிந்தியவந்த
பத்தியாகவே னுதையுந்தந்த. (கண்ட)

வசனம்.

ஆ-ஆ வாருமப்பா மாதவா நமது நாமதேயம் யேதென்றால் வினுதையம்மாள் விரும்பியபடிக்கி காசிபர் முனிவர் தந்த அண்ட சத்தைவைத்து ஆயிரவருஷகாலம் வினுதையம்மணவள் அவை யங்காற்க அந்த அண்டசத்தில் உற்பணமாகிவந்த கெருட பகவா னடா மாதவா.

கெருடன் கவி-தோடி.

பூமனேதந்நாதா புரவலர்குலத்தில்வந்து
மாமனேமடியச்செய்த மாதவா அரிகோவிந்தா
சோமனேசடையணிந்த சுந்தரியுடன்பிரந்த
வாமனரூபாவுந்தன் மலரடிக்கடியேன்போற்றி

வசனம்.

சரணஞ் சரணமையா சுவாமி லோகநாயகா யிந்த அடி யேனே அழைப்பித்த விதம் இன்னதென்று தெரிவிக்கவேண்டும் கர்த்தனே.

கிருஷ்ணன் கவி-கேதாரகௌளம்.

வடிவுள்ளவயனதேயா மகாராஜநாகவாழி
கொடியவநரகாசூரன் கொலுமண்டபத்துக்கேகி
சடுதியாய்நாமுமிங்கே சமர்செய்யவந்தசேதி
கடுகியேயவனுக்கோதி கண்டிங்கேவருகுவாயே.

வசனம்.

வாருமப்பா கெருடபகவானே நரகாசூரனுடைய கொலுமண் டபத்துக்கேகி நாம் சமர்களங் கொண்டுவந்திருக்குஞ் சேதியை தெரிவித்து பதிலரிந்து வாருமப்பா வயனதேவனே.

கெருடபகவான் தரு-மோகனம்.

அண்டமண்டலம்நடுங்க விண்டலம்தனிலெழும்பி
அதிவேகமாகநடந்தான் கெருடதேவன் (அதிவேக)

தற்காலமிதுவென்று சற்பகூட்டத்தைவெல்ல
கலங்கித்தவிக்கநடந்தான் கெருடதேவன் (கலங்கி)

வாசுகமுடிநெளிக்கவீசி உத்திறதீரங்கொண்டு
வந்துகோட்டைக்குள்ளேபுகுந்தான் கெருடதேவன் (வந்து

தங்கமுடிசூான்கொலுசிங்கார மண்டபங்கண்டு
சரிபீடந்தனிலமர்ந்தான் கெருடதேவன் (சரிபீடந்)

பொது-வசனம்.

இப்படியாக சரிசிம்மாசனத்தில் எழுந்தருளிய கெருடபக வானை நரகாசூரன் கண்டு சொல்வது.

நரகாசூரன் தரு-மோகனம்.

அச்சமில்லாமலெதிர் வச்சிரப்பீடமமர்ந்தவன்
ஆரடாநீபாரடா அடடாவந்த (ஆரடா)

கெருடன் தரு.

அரிவாசுதேவாதன் பரிவாவுன்னிடத்துக்கு
அனுப்பவந்தவன்நானடா கெருடனென்பேர் (அனுப்ப)

நரகாசூரன் தரு.

கருடனேவணக்கமத்து சரிசிம்மாதனமீரியே
காரணமிதுவென்னடா அடடாவந்த (காரண)

கெருடன் தரு.

உன்னையுமளித்ததந்தை தன்னையுந்தாங்கவல்லவன்
உனக்குவணக்கம்செய்வேனே அடடாசூரா (உனக்கு)

நரகாசூரன் தரு.

வணக்கமற்றுமேயிங்கு யிணக்கமில்லாமல்பேச
வந்தாயாகட்டும்சொல்லடா நீவந்தசேதி (வந்தா)

கெருடன் தரு.

இன்றைக்கிமாயனுன்மேல் சண்டைக்கிவந்திருக்கிறார்
இப்பவேவெளிப்படடா சாமர்த்துண்டானல் (இப்பவே)

நரகாசூரன் தரு.

இடகுலத்துகிருஷ்ணன்யென்னை யடக்கவந்தானென்சொல்ல
என்னமதிகெட்டுதோ அடடாயிங்கே (என்ன)

கெருடன் தரு.

மமதைஅசுறர்க்கு யெமனும்வரவில்லையோ
மார்க்கமரிந்துபேசடா அடடாசூரா (மார்க்க)

29

நரகாசூரன் கவி.

கொட்டமதுகொண்டுவெண்ணைபால் தயிர்மோர்திருடிகோதைமார்
வட்டவனைகையடியும்மத்தடியும் துடுப்படியும்வாங்கிகீர்த்தி [கள்
கெட்டவனேவில்லெடுத்து அம்பெடுத்து வந்துயென்னைகொல்லத்தாது
விட்டவனே அவனுயிரைவாங்கிடவே நானுமிதோவெளிபட்டேனே

வசனம்

அடாவாடா கெருடனே அந்த கிருஷ்ணன் சேப்பல்லயிலே கெர்வங்கொண்டுபால்தயிர் வெண்ணை திருடி கோபிகாஸ்ரீகளுடைய கையாலும் மத்தாலும் துடுப்பாலும் தடியாலும் அடிப்பட்டு கட்டுண்டு கள்ளனென்றும் திருடனென்றும் பேர்வாங்கி கெட்ட கிருஷ்ணனே யென்மேல் வில்லெடுத்து அம்பெடுத்து இப்போது யென்னை கொல்ல வந்தவன் அவனுயிரை வாங்கும்படி சண்டைக்கி வெளிப்பட்டேன் யென்று சல்தியாகச்சொல்லடா கெருடா.

கெருடன் வசனம்

சரணம் சரணமையா சுவாமி அந்த நரகாசூரன் சண்டை கோலங்கொண்டு இதோ வருகிறதாக சொன்னேனையா சுவாமி.

நரகாசூரன் வசனம்.

கேளுமப்பா மந்திரியாகிய முறகாசூரனே நமதுசேனைத் தலைவனுகிய பீக்ஷணுசூரனை அழைத்து வாருமப்பா மந்திரி.

பீக்ஷணுசூரன் கவி.

தாளமாமணிபதித்த சதுர்மணி அலங்கரித்து
உருளமாமணிபதக்கம் ஒளிபெறசிலைவாளேந்தி
திரளானசேனை சூழ திடுக்கிட்டுதேவரெல்லாம்
பிரளயமிதுவோவென்ன பீக்ஷணன்வருகின்றனே.

தரு-மோகனம்.

தீரமாபீக்ஷணுசூரன்வந்தான்
தேசமஞ்சியராஜாராஜரும் கூசவேமனம் பாசமிஞ்சியே (தீரமா)

வச்சிறமணி வகுடமுமின்ன
வன்னமாமணிபொன்னும்பூஷணம் மின்னவேவெகு உன்னிதத்
துடன் (தீரமா)

இலக்கமற்ற சேனைதளஞ்சூழ
நமரிசின்னமும் குமுரும்பேரிகை டமறங்கின்னரி கமிரிவீசிட (தீர)
தண்டமும் தனு வாளுமேந்தியே
சாரியாகவேதேரியமனம் மீரியேவெகுவீரியத்திடன் (தீரமா)

பீக்ஷமாசூரன் குருங்-கவி.

செந்திருமார்பன்கந்த தீரனேபாதம்போற்றி
எந்தனையழைத்தசேதி யின்னதென்றறிவிப்பீரே.

நரகாசூரன் கவி.

உந்தநர்படையோடே கிதுவாரகாபுரிகோபாலன்
வந்தவன்தனைசெயித்து மடித்திங்கேவருகுவாயே.

பீக்ஷமாசூரன் வசனம்.

சரணம் சரணம் திருமாலளித்தபுதல்வனே உமது திருவடிக்கி அடியேன் வந்தனம் அடியேனையழைப்பித்த காரியம் யின்னதென்று சொல்லவேண்டுமையா சுவாமி.

நரகாசூரன் வசனம்.

அடவாடா சேனாதிபதிகளுக்கு சேனைத்தலைவனாய் விளங்கிவரா நின்ற பீக்ஷணாசூரனே நீஙமது ரதகெஜ துரகபதாதி களாகிய நால் வகைசேனைகளை கூட்டிக்கொண்டு போய் இப்பவும் நம்முடைய பேரில்சமமாகிய உயித்தியத்துக்கு வந்திருக்கும் துவாரகாபுரிவரச ஞகிய அந்ததிருட்டு கோபாலனை செயமடைந்து வாரும்பீக்ஷணா சூரனே.

சத்தியபாமா தரு

பேரும்பெருகவரும்சூரன் சேனாதிபதி
பீக்ஷணனிவனுகும் கர்த்தனேபாரும். [பீக்ஷண]

சத்தியபாமா கவி-எதுகுலகாம்போதி.

குடைகொடிரதமும்வானை கூட்டமும்பரிபதாதி
இடையவேவந்துகண்டு என்னுடைபிராணநாதா
கடைவிழிசிவந்துயெந்தன் கரங்களும்பதைக்குதிப்போ
தடையில்லாவிடையளித்தால் சமர்செய்துவருகுவேனே.

வசனம்.

ஆபிராணநாயகா குடிகொடிாதகெஜ துரகபதாதிகளான பெருங்கூட்டமான சேனைகளை யெமகிரிக்கி சேர்த்து வருகின்றேன் கர்த்தனே.

கிருஷ்ணன் தரு-மோகனம்.

சத்தியபாமாபெண்ணே சமர்த்துபேடாதேகண்ணே
சண்டைசெய்யவும்போமோ கண்டுகொள்ளடித்தேனே:

சத்தியபாமா தரு.

எனக்கிப்போவிடைதாரும் சுவாமியிப்போ
எந்தன் சமர்த்தைப்பாரும்.
எத்திசையுந்நடுங்க வெத்திசெய்குவேனிப்போ
எந்தன்சமர்த்தைசுவாமி சந்தோஷமாகப்பாரும் (எந்தன்)

கிருஷ்ணன் தரு.

பெண்ணேகண்ணேசொர்ணமே மேடைமடவர்ணமே
கண்ணேயெப்படிநாளும் உன்னையனுப்பிடுவேன் (பெண்ணே)

சத்தியபாமா தரு.

தசரதர்மைந்தர்முன்னே சுவாமிமுன்னாலே
தான்கொண்ட சீதைதன்னை
சதமுகன்மீதுவிட்ட விதமரியாதோசுவாமி
சந்தேகம்நீர்படவேண்டாம் யெந்தன்வீரத்தைப்பாரும் (த)

கிருஷ்ணன் கவி.

சத்தியபாமாவுந்தன்தைரியத்தை அரிந்திருப்பேன்
பத்தியாய்வினவிக்கேட்டபடிக்கி நான்சம்மதித்தேன்
வெத்தியும்புகழும்பெற்று வீரியயம்செலுத்துவாயே
கத்தியும்தனுசுதண்டம் கடுகியேவாழ்த்திதந்தேன்.

வசனம்.

கேளும்பெண்ணே சத்தியபாமா நீமகாவல்லமைசாலி யென்றறிவேன் நீ கேட்டுக் கொண்டபடிக்கி விடைகொடுத்தேன் ஆயுதங்களையெல்லாம் வாழ்த்திதந்தேன் ஆகையால் நீநம்மது வாகனமேரி சமர்கிடந்து போய்வாரும் பெண்ணே சத்தியபாமா.

சத்தியபாமா தரு.

சண்டைசெய்யவே யேகினாள்-சத்தியபாமா (சண்டை)
சண்டைசெய்யவே யிப்போ கொண்டு கெரு னேரி
கண்டுபடைகள் தன்னை மண்டிக் கெக்கலிக்கொட்டி (சண்டை)

பீக்ஷணசூரன் தரு.

எதிர்த்துமீரியே நடந்தான்-பீக்ஷணசூரன் (எதித்து)
எதிர்த்துமீரியேசூரன் றதத்திலழகுடனே
குதித்துசேனைகளெல்லாம் பதைத்துபடையெடுக்க (எதித்து)

சத்தியபாமா தரு.

காலருத்திரியென்னவே-சத்தியபாமா (காலருத்)
சூலங்கறத்தில்மின்ன ஆலகாலம்போல்சீறி
கோலகாலனைப்போலே சாலமில்லாமல்தேரி (காலருத்)

பீக்ஷணசூரன் தரு.

அண்டரண்டம்நடுங்கவே-பீக்ஷணசூரன் (அண்ட)
அண்டரண்டம்நடுங்க தண்டம்கரத்திலேந்தி
பெண்ணேயெந்தனைவெல்வ துண்டவென்றுகூறிட (அண்ட)

சத்தியபாமா கவி-தோடி.

பேருபடையுடனேவந்த பீக்ஷணசூரதீரா
துரும்பிடைக்கிணையாயுந்தன் சூரத்தைமதித்திடாமல்
நரும்படையாளவில்லை நானேறுதிப்பாணம்பூட்டி
வரும்படையுடனேவுன்னை வாட்டுவேன்யெதிர்த்துவாட்டுவேனே.

வசனம்.

அடாசூரனே தருமபிடையாவது உன்னையும் மடிக்காமல் என சாரங்கி வில்லைபூட்டிபாணத்தைமீட்டி சேனைகளுடனே உன்னையும் மடிக்கும்படி வந்தேன் நீ வல்லவனானல் யெதிர்த்து வாரு சூரனே

பீக்ஷணசூரன் தரு-முகாரி.

எங்களைமதியாமல் நங்கையேதிடம் கொண்டு
எதித்துமீரிவர்துபதைக்காதே சிங்கம்யானைக்கு
அஞ்சுவதரியாயோ தீரமாகமீறிகுதிக்காதே

சரு. தேடியுந்தனை நாடிவந்தேனே
மீடில்லாசாம கோடி மீட்டினேன் (எங்களை)

சத்தியபாமா தரு.

வித்தக்கிபாலனே பத்திசெய்துமூர்த்தி
வில்லையெடுத்து நாணியேற்றினேன்
பத்தியாய்பாணங்கள் மெத்தவேவ ..ிட்டேன்
பாணமெல்லாம்யேக மாற்றினேன்
சரு. பண்டுசூரனை வென்றசுராணி
என்றுயெண்ணியே கொண்டுபாரிதோ (வித்தக்கி)

பீக்ஷணசூரன் தரு.

இப்படியெளிதாக செப்பியேதிறமாக
எதிர்த்துவந்து வீணாய்மடியாதே
கைப்பிடியாயுன்னை இப்பவேசிரையில்வைப்பேன்
கண்டிக்கயெவராலும் முடியாதே
சரு. சத்திசூலமும் பத்திவுந்தனை
தத்திகுத்தியே வெத்திசெய்குவேன் (இப்படி)

சத்தியபாமா தரு.

பிரளயம்படையெல்லாம் உருளவேதலைமண்டை
பேரிடிசரங்கோடி மீட்டினேன்
பிரளவேமூவரும் யிருளுவந்தடையவே
வீறசூஸ்திரங் காட்டினேன்
சரு. மீண்டனேதீரங் கொண்டுபாருதோ
அன்புந்தனை துண்டமாடுவேன் (பிரளய)

பீக்ஷணசூரன் கந்தார்த்தம் மோகனம்.

மகம்மேருகிரியைத்தூக்கி வதைத்தாடுஞ்சூரனென்று
செகமெலாம்நடுங்குமெங்கள்சேதிகண்டறிந்திடாமல்
அகமதிலச்சமற்ற அருவையேவுன்னையிப்போ
மகிமனம் கடுகடுத்து.

தரு.

வீரவாளெடுத்துதித்தேன்- வுந்தனைக்கொல்ல
தீறமாக வந்துயெதித்தேன்

சூரமாகபெண்ணொருத்தி சுத்தவீரம்பெற்றுவந்தாய்
ஆரபாரங்கொண்டெழும்பி னேரமோவுந்தனைக்கொல்ல (வீர)

சத்தியபாமா கந்தார்த்தம்-மோகனம்.

கண்டனேயுனதுவீரம் கரிபரிசேனையெல்லாம்
துண்டனேஅதமதாக்கி சுழண்டுமேவாளைவீசி
தண்டனைசெய்யவேண்டி சராசறபுவிகளஞ்ச
கொண்டனே வுக்கிறகோபம்.

தரு.

கூரியசரங்களெடுத்தேன்-மந்திரஞ்சொல்லி
வீரிய மொடுங்கவிடுத்தேன்
பாரியேமுடிசிரசும் மீரியேசுழண்டுவிழ
சூரியேகிரணம்போலே தேரியேசெயமடைந்தேன் (கூரிய)

நரகாசூரன் கவி.

பலசாலியானசேனாதிபதி யொருமனுஷியாலே
தலைசாய்ந்துமடிந்தானென்று சங்கதியரிந்தேனிப்போ
குலைகாலிதன்னைவெட்டி கூத்தனுக்கிரைகொடுக்க
நிலைமேவும்மந்திரிதன்னை நீங்களும்அழைத்திடீரே.

வசனம்.

வாருங்களப்பா சாரணர்களே மகா சாமார்த்தியமான சேனாதிபதி சேனாசயினியத்துடன் மடித்துவிட்ட மனுஷியை யெமனுக்கிரைகொடுக்க வல்லவனான யெனது மந்திரியாகிய முறகாசூரனை சவிதியில் நாமழைத்தோ மென்கிறதாய் அழைத்து வாருங்கள் சாரணர்களே.

முரகாசூரன் கவி.

அடுக்குடன்அண்டமெல்லாம் அதிரவேதேவரெல்லாம்
திடுக்கிடஅதட்டுந்தீரன் திருமணிபணிகள்மின்ன
முடுக்குடன்நரகாசூரன் மொழிந்திடும்வசனம்கேட்டு
சடுக்கென்முரகாசூரன் சபைநாடிவருகின்றாரே.

தரு.

மந்திரிமுறகாசூரன் வந்தானே-நல்ல
வடிவுடன்மணிமுடி கெடிபெருஞ்சூரன் (மந்திரி)

35

தந்தரத்தளத்துடனே தர்ணக்கிடுகிடென்ன
சுந்திரமானபணிகள் சேரதிப்பளனென்ன
சுரு. துங்கறனமுக சிங்கமுமின்ன
செங்கையிர்க்கூடகமும் அங்கமிலங்கிட (மந்திரி)

வீராதிவீரரெல்லாம் மிகவும்பயந்தொடுங்க
மாராதஅம்புருத்தூணி மகிழ்ந்தமுதுகிவிட்டு
சுரு. மதகரிபரிகளும் ரதமுடன்சேனையும்
விதவிதமாகவே அதிரவேபூமி (மந்திரி)

வேலும்சூலமும்தண்டம் வில்லுலக்கையிலங்க
மாலுமயனுமஞ்ச வடிவாரதத்திலேறி
சுரு. மலைகராகிய சிலறணபேரிகை
இலகியமுரசமும் கலகலவென்ன (மந்திரி)

மாதவனையனுப்பி பகிழ்ந்துசமர்கெலிக்கும்
யாதவகுலகிருஷ்ணன் ஆண்மையறிவோமென்று
சுரு. அந்தரதேவரும் சிந்தைகலங்கிட
வந்தசூரனுமனைந்திட கண்டு (மந்திரி)

முரகாசூரன் கவி.

துன்னியேமணிபராக்கு சோதிடபுரிக்கிச்செங்கோல்
மின்னியேநரகாசூர வேந்தனேபாதம்போற்றி
கண்ணியமானகோவே கடுகியேயிச்சபைக்கி
என்னையுமழைத்தசேதி யெடுத்துரைசெய்குவீரே.

வசனம்.

சரணம் சரணம் அசுராகுலகர்த்தனே யென்னை அழைப்பித்த காரணம் அருள்செய்யவேண்டும் கர்த்தனே.

நரகாசூரன் கவி-மோகனம்.

வெண்ணையுந்திருடியுண்ட வெழ்க்கமில்லாதகிருஷ்ணன்
என்னையுமகிழ்ந்துயேவி பெரும்படைக்கதிபன்தன்னை
விண்ணினில்மடியச்செய்த மெல்லியஅவளைவெட்டி
மண்ணையுகவ்வச்செய்த வமைச்சனேவருகுவாயே.

வசனம்.

வாருமப்பா யென் மனதுக்கேத்த மந்திரி முரகாசூரு ரேப்பல்லையில் வாடையிலே யாதவாளாகிய யெடையருக்கு புத்தியானது

பிடரியிலே யென்று பழமொழி வழக்கப்படி வழங்கிவருவது அப் பேர்க்கொத்த யிழிவானவர் வீடுகள் தோரும் பால் தயிர் வெண் ணைகளை திருடியுண்டு கண்ட கோபிகாஸ்ரீகளால் கட்டுண்ட கள்ள னாகிய கிருஷ்ணானவன் வந்து தன்தேவியாளாகிய சத்தியபாமை யையேவி பெரும்படையுடனே நமது சேனைத்தலைவனையும் மடித்து விட்டார்கள் நீ அதிகவேகமாய்ச் சென்று அவர்களை மடித்துவா ரும் முராகாசூரனே.

முராகாசூரான் தரு.

நானிதோஅவர்கள்தன்னை வானுலோகஞ்செய்திடவே
நாடினேன்சமருக்கிப்பவே பாரும்சமர்த்தை (நாடி)

மதகரிபரிகள்சேனை ரதமதுநெரிங்கிடவே
மண்டலம்கிடுகிடென்னவே தாவிநடக்க (மண்ட)

விண்டலத்துவர் நடுங்க சண்டபிரசண்ட முடன்
வில்லதுஎடுத்து பிடித்தேன்வுக்கிறுகாரமாய் (வில்லது)

கண்டுகோபால கிருஷ்ணன்பெண்டு நமக்கிறை
காட்டுவேன் கொடிகாட்டுவேன் இப்பவேபாரும் (காட்டு)

முராகாசூரான் கவி.

முல்லைமாதரசியென்னும் முடிபணிவிருதுபூண்டு
வல்லமை செலுத்தவந்த வண்மையும்மரிந்திருப்பேன்
வில்லையுந்துணிந்துவுந்தன் விருதுகளழித்துயேமன்
எல்லையுந்தரவுனக்கு யெதிர்த்துமந்திரிவந்தேனே.

வசனம்.

முல்லரிவத்துக் குரியவளான யெடச்சியானவள் யெடக்குலத் தரசியென்றும் வருதணிந்து வீரியம்செய்யவந்தாயல்லவா உன்னி- டவண்மையை முன்மேயரிந்திருப்பேன் யிதோவில்லை பூட்டிபாண மெடுத்து உனது விருதுகளை அழித்து யேமனுலகத்தை உனக்கு ஆக்ஷியாகதரும்படிக்கு மந்திரி முராகாசூரன் வந்து யெதிர்த்தேன் பாரும் சத்தியபாமா.

சத்தியபாமா தரு-மோகனம்.

முராகாசூரனேவாடா-வாடாவுந்தன்
மூர்க்கம்அரிவேன் போடா

சரகாதிமாருதி தன்னையென்றுசெப்பும்
உறகாதிசேஷனும் ஒடுங்குவாரெனைக்கண்டு (முரகா)

முராகாசூரன் தரு.

பரமேட்டிநீதானோ-யிப்படிக்கொத்த
பதட்டம் பேசுவதேனோ
சரமீட்டியுனையிப்போ சண்டனுக்கிரையாக்கி
நரமேட்டி அளிக்கவே நான்செய்யும்விதம்பாரும் (பர)

சத்தியபாமா தரு.

சேனைத்தலைவன்போக-படைகளெல்லாம்
சிதறி அதமதாக
வானத்தலைவன்கண்டு மனம்மெத்தபிரமிக்க
யீனத்தடையசுயுன்னை பாரும்கூராக்வெட்டுவேன் (சேனை)

முரகாசூரன் தரு.

பெண்ணுக்குள்ளாங்காரி-மிதித்திடும்
பேசுறாய் நீமீறி
ஒண்ணுக்குநூராக வொளிபெத்தசரமீட்டி
விண்ணுக்குள்ளனுப்பவே விடவந்தேன்திடம்பாரும் (பெ)

சத்தியபாமா கந்தார்த்தம்-மோகனம்.

கையிருளுடைய பாணம்பூட்டினேன் அமச்சன்கண்டு
வகைவகைசரங்கள் தொட்டு மாத்தவேமிகுந்தகோபம்
நகைபுகையெழும்பிமீறி ராமநாதரைத்துதித்து
துகைதுகை யாகபாணம்.

தரு.

தூத்தினேனே படையைகாற்றில் (தூத்தினேனே)
தூத்திமந்திரகிரிக்கி சாத்திட்டசெயபேரி
யேற்றிசெய்யவுந்தேவர் தூத்திவிட்டேன் காற்றில் (தூத்தி)

நரகாசூரன் கவி-கலியாணி.

பெண்ணுக்குள்ளடக்கிமந்திரி பெரும்படைபலரும்மாள
கண்டுக்குறகாரமீரிகடுகடுத் தெழுந்தசீறி
இன்றுக்குள்ளவரையெல்லாம் யெமகிரிசேர்ப்பேனென்று
சண்டைக்குநரகாசூரன் தனிரதமேறினானே.

நரகாசூரன் தரு.

சண்டைக்கிடடந்தானே—நல்ல்
முரகாசூரனுமடியவேகண்டு நரகாசூரனுந்திடமதுகொண்டு (சண்)
சண்டைக்கிடடந்தானே அண்டர்க்கதிகமாக

சுரு. தளமுடனேவெகு வுளமிகமீரிட
அளவில்லாறணக்களம் மதைநாடி (சண்டைக்கி)

கால்பாசமுங்கத்தி கதிரவேலிருப்புலக்கை
சூலதண்டமும்பாலா சுரிகைபாங்குபட்டயம்
சுரு. தோமரமீட்டியும் சேரிசைகுந்தமும்
தாமரைசங்கமும் சக்கரம்பிடித்து (சண்டை)

அடிக்கமுரசுடங்கா அதிரும் சல்லாரிபேரி
வெடிக்கஅண்டரண்டமும் விருதுவாத்தியம்பாட்
சுரு. வீரியமணிமுடி பாரியபுயவனி
சூரியனெனவே தேரினிலேறியே (சண்டை)

எந்தபலத்தினாலே யெடயன்தேவியுடனே
வந்தானிவ்விடம் நாடிமடித்தானேமந்திரியை
சுரு. மட்டுபடாசின மீறியேகூறியே
கட்டுபடாமல் சாலியுந்தேரியே (சண்டை)

கிருஷ்ணன் வசனம்.

வாரும்பெண்ணே சத்தியபாமா இதோ நரகாசூரன் சண்டைக்குவருகிறான் அவனை நானெதிர்த்து சமர்புரிய மனதாகினேன் ஆயுதங்களைவாழ்த்தி சந்தோஷமாய்தாரும் பெண்ணே.

கிருஷ்ணன் தரு-மோகனம்.

கெடிபெரவந்திடும் நரகாசூரனேவாடா-உன்னையிப்போ
கெலிக்கவந்தேனே நீ யெதிராளியோபோடா
சுருள். மடியசேனையை வாட்டுவேன்
மகிழ்ந்துவீரியம் காட்டுவேன்
நெடியசராசரங் கூட்டுவேன்
நீட்டியபம்பரம்போல் வாட்டுவேன் ஓட்டுவேன் (கெடி)

நரகாசூரன் தரு.

ஆடுகள் மாடுகள் மேய்த்திடும் நீஎன்னவீரனே
அரிவில்லாமலே பேசவந்ததீரமோ.
சுரு. ஓடஓடவே தாக்குவேன் ஒருகரத்தினால்தூக்குவேன்
வாடவேஉயிரைபோக்குவேன்
மதமுடனெதிர்வரும் விதமதை நீக்குவேன் (ஆடு)

கிருஷ்ணன் தரு.

அழிவுகாலமும் வந்தரியாமலேவீரு
ஆண்மையும்சௌரியம் கபடமாயெண்ணிபேசுரு
சுருள். இழிவுபேசியேதுள்ளாதே இப்படிநீமதம்கொள்ளாதே
ஒழிவதென்பதுவிள்ளாதோ
உனக்கரிவித்தேன் மெள்ளவே கொள்ளவே (அழி)

நரகாசூரன் தரு.

எளிதமெண்ணியே வந்தியோ-யெந்தனேசூதா
ஏகனாய்வந்திடும் இடையனெனக்கொருதோதா:
சுரு. துளிதபடலமாய்சாடவே சூரமழிந்துவோடவே
கூளிகளும் கழுகாடவே
கொடியசாமிது போடவே தேடவே (எளித)

கிருஷ்ணன் கந்தார்த்தம்-பந்துவராளி.

அடித்தேனேசேனையெல்லாம் அதமதுபட்டுபோக
மடித்தேனேகொடிதேர்வில்லும் மணிமுடிவல்வன்சாய
எடுத்தேனேவிருதையெல்லாம் மோர்முகமழிந்துவாட
பிடித்தேனே பாணம்பூட்டி.

தரு.

பிரசண்டமூடா-உனது வீரம் அரிவேண்டா-வாடா
எரிகொண்டபாணத்தை யேவியேவுனைக்கொல்ல
இடிவொலிமிகுத்திட கடிகியேவரவிட்டேன் (பிரசண்ட)

நரகாசூரன் கந்தார்த்தம்-மோகனம்.

வன்னியைதரிக்கும்பாணம் வந்துமேதாக்கும்போது
தன்னினவழிந்துமிக்க தைரியம்கொண்டெழும்பி
அன்னியநல்லதந்தை யவருக்குமென்றுயெண்ணி
மின்னிய நரமாசூரன்.

தரு.

மேகத்திலொளித்தான்-திடமிகுத்து மோகத்தில்-களித்தான்
போகதேவாதிகள் புரம்தந்துஓடியே
பூமிநாயகன்பாதம் நேமமாய்செய்ய (மேகத்தி)

கிருஷ்ணன் கவி-கலியாணி.

திரேகசுந்தரனேயென்தன் சிருள்ளகெருடபாலா
நேரதாய்நீயுமேரி நொடிக்குள்ளமாய்கையாகி
மேகப்பந்தியிலொளித்த வீரியசூரன்தன்னை
ஏகிஅந்தரமேசென்று யென்முன்னேகொண்டுவாருய்.

வசனம்.

வாருமப்பா கெருடபாலா நரகாசூரனானவன் நமக்குப்பயந்து மாய்கை உருவெடுத்து மேகப்பந்தியிலொளித்து விட்டபடியினுலே நீ அந்தரமார்க்கம் சென்று சூரனைகண்டு அதலகதல ஓட்டாமல் இவ்விடம் கொண்டு வருவாயப்பா கெருடபாலகா.

நரகாசுரன் சம்மாரம்.

கெருடன் தரு.

மாயவன்மொழிப்படிக்கி—கெருடன்
வந்தானேபரந்துமே அந்தரமாக
வாய்வுமண்டலம்கடந்து—கடுகியே
வருணமண்டலம்வந்தார் உன்னைப்போல
ஏகமாய்கடுகடுத்து—ஓடியே
எங்குமனிதரிந்து தங்குமவனை
மேகப்பந்தியிலிருந்து கோபித்துவிண்டலத்
திடிபோல்சாடி சண்டைதொடுத்தான் (மாயவன்)

கெருடன் தரு.

வாடாவாடாசூரா பூமிக்கிபோக
வல்லவனோவாடா ஓடாதேயென்னைக்கண்டு
ஒளிந்தாலும்விடுவேனோ உனக்கஞ்சி
யுன்கையில் நான்வசப்படுவேனோ
சுருள். ஓதடாவந் தேதடாயிது
சூதடாபெரும் தீதடா யினிசும்மா (வாடா)

நரகாசூரன் தரு.

போடாபோடா மூடாசொன்னதெல்லாம்
பொருத்துக்கொண்டேன் வாடா
யீடேதுஎனக்குநீ என்னவீணாய்பேசுறாய்
எந்தனைமதியாமல் வந்திங்கேவீசுராய்
சுருள். ஏரடாமிஞ்சி பாரடாவீரம்
கூரடாபதி சேரடா வாட்டுவேன் (போடா)

கெருடன் தரு-பியாகடை.

விட்டுநான்போவேனோ போனாலென்ன வீரியநாவேனோ
கெட்டுமுரிந்தோடி வந்திங்கேதுள்ளாதே
கெம்பீரங்கெட்டுமே நீமதம்கொள்ளாதே
சுருள். கொண்டனேபெரு மூடனேஇனி
தேடனேஉன்னை ஓடஅடித்தேனே (விட்டு)

நரகாசூரன் தரு.

பக்ஷிருசாதிருசெருக்காய்யெண்ணி பதட்டம்பேசிவாராய்
கக்ஷிபேசியென்னை வெல்லவும்மாளாது
கெருடனேஇனிமேல் என்கோபம்தாளாது

சுருள். கண்டனேஅடா துண்டனேகோபம்
கொண்டனேஉன்னை தண்டனைசெய்வேண்டா (பகூதி)

பொது-வசனம்.

இப்படியாக கெருடனும் சூரனும் வெகு சாமார்த்தியமாக யுத்தம்செய்ய கெருடன் நரகாசூரனைபிடித்து பூலோகம் கொண்டு வருவது.

கெருடன் தரு.

கிட்டியேஉனைபற்றி தட்டியேதடங்கொண்டு
கிளம்பியேவீரத்தை யழித்தேனே—தத்தி
தளும்பவேபூமிக்கி இழுத்தேனே
வீரியமுடுங்கவே சூரனும்நடுங்கவே

விண்ணவர்மகிழவே வீசினனே—மோ
வண்ணனைநான் துதியேசினனே
முடுக்காதேசூரனை கெடுக்காதேகீர்த்தியை

முரகரிபாதத்தை பணிந்திடுவாய்—நாதனே
கடுங்கோபம்தணிந்திட வந்திடுவாய்
அகலாமலுனைக்கொண்டு பகவானைநான்கண்டு

அவரடிபணிந்திட வோடினனே—இதோ
தவராமல்யெதிர் வந்துநாடினனே (கிட்டி)

கெருடன் வசனம்

சரணம் சரணம் கர்த்தனே மேகப்பந்தியி லொளித்திருந்த நரகாசூரனைக் கைப்பிடியாய் பிடித்துக்கொண்டு வந்தேன் சுவாமி.

கிருஷ்ணன் கவி.

பலசாலியானமைந்தா பளாபளாமகிழ்ந்தேனப்பா
நலமேவுநரகாசூரன் நடுங்கியங்கொளித்திட்டாலும்
விலகாதுவிதியின்றெண்ணி வீரியத்துடனேநின்று
சலமீரிவில்வளைத்து சமர்செய்யவருகுவாயே.

வசனம்.

அடாவாடாசூரனே பளாபளா நீயென்னால் எனக்கு பயந்து புரம்தந்து நீ யெந்தவிடத்தி லொளித்தாலும் உன் தலைவிதி

யானது விடப்போகாது அதைஅறிந்துபாராமல் ஏன்பதைக்குறாய்
யெதிர்த்துவாடா சூரனே.

நரகாசூரன் தரு.

விடவிடபேசியேயெளித வார்த்தையும்கண்டனே
படபடவென்றுகோபமாய் சிலசரங்கொண்டனே
கடளொலிபோலவே பேரிகைபாட
கண்டவரஞ்சியே நடுங்கியோட
காட்டிவீரியம் பூட்டியேதனு மீட்டியே
சரம்வாட்டுவேன் உந்தனை (விடவிட)

கிருஷ்ணன் தரு.

அந்தரபூமியும்நடுங்கவே தனுவதைபூட்டினேன்
அண்டகடாகமும் அழிந்திடவேசரம் மீட்டினேன்
செந்தணலெங்குமே மீரிட மீரிட
திக்குகெஜங்களும் வீரிட வீரிட
திறமிஞ்சியவீரனே ரணசூரனே இருகூரிடவந்தேன் (அந்)

நரகாசூரன் தரு.

மதகிரிபுஜபலம்யெந்தனை வெல்லபோகுமோ
மடிக்கஅரன்அரிஅரி தேவதேவனலாகுமோ
ரதமதுபேரிகை சரமதுபோடவே
ராணுவங்களும் வந்துமேசாடவே
நாடியேசரம்கோடி கோடியாய்
மூடிவுந்தனை வாடிடசெய்வேன் (மதகிரி)

கிருஷ்ணன் தரு.

கோடிசூரியன்வெள்ளி பெறசக்கரம்தாங்கினேன்
குண்டலத்துடன்மணிமுடி வீழவேவாங்கினேன்
ஓடகறகற வென்றுமேஙாட
உருதியாகவே அரிந்துமேசாட
உத்தமதேவரும் சாததவேமாமலர்
பத்தியாமொழியவும் வெற்றியடைந்தேன் (கோடி)

கிருஷ்ணன் கவி.

நவமணிமாமகுட முடிசூரான்தந்த
நல்லபகதத்தனுக்குமகிழ்ந்தளித்து
அவரவர்கள்விருதையெல்லாம் அனுப்பிவைத்து
அம்பரத்துமணிகிருபைகருடனாலே
தவமணிசேர்பெண்களுடன் துவாரகைக்கு
தானனுப்பிஅதிதிமணிகுண்டலத்தை
கவனமுடன்கொண்டளிக்கதெய்வலோகம்
காரிழையைக்காணமனதாகினேன்.

வசனம்.

கேளும் பிராணநாயகி நரகாசூரனைமடித்து செய்கருமங்களை நடத்தி அவன்மைந்தனை பகதத்தனுக்கு முடிதரித்து நரகாசூரன் கொண்டுவந்து வைத்திருந்த மணிகூடகிரியையும் பதினாயிரம் பெண்களுடனே கெருடபகவானாலே துவாரகாபுரி சேர்ந்து வற செய்தேன் தேவேந்திரன் தாயாருக்கு மணிகுண்டலத்தை தந்து பாரிசாதம் உனக்களிக்க தெய்வ லோகத்துக்கு போவோமடி பெண்ணே.

சத்தியபாமா தரு-காம்போதி.

சுந்திரமாமணிபறக்கு சோதிடம்விட்டு தேவ தேவா
அந்தரம்தனைநாடி வந்திடமகிழ்ந்தேனே தெவ தேவா

கிருஷ்ணன் தரு.

வடகைலாசமும்வைகுந்தம் தன்னைபாரும் நாயகி பிராணநாயகி
இடமதுதபசிகளிருக்குமிடத்தைபாரும் பெண்ணே எந்தன் கண்ணே

சத்தியபாமா தரு.

கைலாசமும்வைகுந்தம்கண்டு தெரிசித்தேன் தேவ தேவா
ஒயிலானவிதமெல்லாம் உரைசெய்யுமரியே தேவ தேவா

கிருஷ்ணன் தரு.

அஷ்டகிரியைபாரும் அண்டாதவனம்பாரும் ஆசைநாயகி ஆசை
பக்ஷிமிருகமுள்ள பலகோடிநதிபாரும் பெண்மயிலே பெண்மயிலே

47

வசனம்.

வாரும்பெண்ணே பிராணநாயகி நாம் வந்த வழியிலிருந்த வேடிக்கைகளைபார்த்து சந்தோஷமடைந்தா யல்லவா இதோ நமது பொன்னுலகம்வந்து தேவசபையை கண்ணால் கண்டோமடி பெண்ணே.

தேவராஜன் தரு-ஜம்பை-சீராம்புரி.

சரணமுந்தன் திருவடிக்கு தருவணியுந்திருமாலே
கருணைவைத்துயென்னையாளும் கமலதிருவடிகள்போற்றி.

கிருஷ்ணன் தரு.

வச்சிரமணிபடையேந்தி மலைசிரகைதானரிந்து
உச்சிதனேவும்பர்கோவே உனதுசெங்கோல்மிகவாழி.

தேவேந்திரன் தரு.

அண்ணலெனும்ஜெகநாதா அடியேனைவொருபொருட்டாயெ
இங்கேநீவந்ததென்ன யெனக்கருளும்திருமாலே. [ண்ணி

கிருஷ்ணன் தரு.

அந்தநாள்நாரதனுமே அபகரித்தமணிமாலை
உந்தன்தாய்தனக்களிக்க உகந்துநான்வந்தேனிங்கே.

கிருஷ்ணன் வசனம்.

கேளும் தேவேந்திர மகாராஜனே உன் தாயாரான அதிதியி னிடமாக யிருந்த விலைவுயர்வான மணிமாலையை நரகாசூரன் பரித்துக்கொண்டு போயிருந்தான் யிப்போது நாமும் சத்தியபாமையையும் அந்த நரகாசூரனை செயமடைந்து அந்த மணிமாலையை உன் தாயாருக்கு தருவிக்கவந்தோம் இந்த ஆரத்தை உன் தாயாருக்கு கொடுத்து மகிழ்ச்சிசெய்யும் தேவேந்திரனே.

தேவேந்திரன் வசனம்.

இந்த தேவலோகத்திலே தாங்கள்மகிழ்ச்சியாகயிருந்துபோக வேண்டும் கர்த்தனே.

பொது வசனம்.

அப்படியே நல்லதென்று தேவர்களாலும் முனிவர்களாலும ஆராதனை பூசைவிதிகளை பெற்றிருக்க அன்பாவிடிந்த பிரகு இந்தி

ராணி முதலான தேவகன்னிகள் பாரிசாத புஷ்பங்கொண்டு அலங்கரித்துக்கொள்ளும்படிக்கி கொலுவுக்கு வருவது.

இந்திராணி கவி-கேதாரகௌளம்.

மின்னலைநிகர்த்தரூபி மேலணிசரிகைசேலை
நன்னிலைகளம்பம்பூசி தகதகன்றிலங்கசோதி
பொன்னிலத்தரசுமிக்க பொருந்தியகன்னிமாரும்
இன்னிலத்தோர் துதிக்க யிந்திராணிவருகின்றாளே.

தரு கேதாரம்.

வதனரஞ்சியர்கூடி அதிகஉச்சிதமாக
வந்தாளிந்திராணிதேவி பெற்றபிரகாசி (வந்தாளி)
வதனரதிவொய்யாரி மகிழும்ரூபசிங்காரி

சுரு. வச்சிரபாணியும் மெச்சியமாமணி
கச்சணிகொங்கையும் வுச்சிதமாக (வதன)

சறப்பளியும்பதக்கம் சந்திரகாரம் பொன்னுடைய
நிரப்பணியுமிலங்க நிகநிகென்றேதுலங்க

சுரு. நிலவுமாமுகம்குலாவிய மாதரும்
இலகுமாமணி கலகலவென்ன (வதன)

பஞ்சவர்ணக்கிளியை பகரும்மொழிமாதரும்
கொஞ்சிவிநோதமாக கூடியானந்தமாடி

சுரு. குங்குமஞாபிணி கங்கனகடகமும்
தங்கியநவமணி பங்கியுமின்ன (வதன)

கொண்டைகுப்பிசடையும் கூந்தலலங்கரித்து
தண்டைவண்டையம் காலில்சத்தமிடத்தரித்து

சுரு. சாடவுமாமலர்சூடவு மெண்ணியே
நாடவுநாக்கொலு கூடமுந்தேடி. (வதன)

இந்திராணி கவி.

ஆவலாயெனக்குகந்த ஆசந்திரவதனரூபி
தேவகன்னியரோடாமும் சித்திரவிசித்திரமாக
யாவருமலங்கரித்து அரிதானபாரிசாதம்
மாவெகுவிந்தையாகமலர் சூடிவருகுவோமே.

வசனம்.

ஆ சந்திரவதனு ஆசரசவிலோசனி நாமெல்லாரும் போஜனுதிகளை நடத்திசாயங்கால மாகையால் சடபில்லைசடைகுச்சு முதலாய வஸ்திராபரணங்களை தரித்து நிலவிழிக்கி யெழுதி திலர்தம் சூட்டி பரிமளாதிகளை பூசிக்கொண்டு பாரிசாதமலரெடுத்து மனதுக்கிச்சை யெப்படியோ அப்படியே சூட்டிக்கொள்ளுவோம் வாருங்கள் பெண்களா.

கன்னி தரு-குல்ரோஸ்.

அம்மாபாரிசாதமலர் அதைக்கொண்டுவந்தோமே
இந். கொண்டைக்கிஅழகாக மலர்கொண்டுஅலங்கரிப்போம்
கன். மாதேசூட்டிநாங்கள் வந்தோமழகாகதேடி
இந். தேவகன்னிமாரேநீங்கள் செவ்வையாய்சூடடிக்கொள்வீரே
கன். தாயேசத்தியபாமா அவள்தனக்குபுஷ்யம்தரலாமோ
இந். பூமிபெண்ணையுங்கூடவைத்து பொருத்தமுண்டோமலர்சூட
கன். சொன்னமொழிபோலேமலர் சூட்டினோம்கொண்டைக்கிமே
இந். இந்திராணிதாயேமாதே மற்றயீசனுக்குங்கிடைக்காதே [லே
கன். மாதேயிதேதுயிங்கே வந்தவிதங்காணஓது
இந். அத்தான்வனமேனிகண்ணாளன் கொண்டுவந்தார்தாவி

இந்திராணி வசனம்.

கேளும் தேவகன்னிகளே கைலாசகிரி பரமசிவனுடைய உத்தியானவனத்தி லிருந்த பாரிசாத விருக்ஷத்தைக் கண்டு தேவகோமானுகிய எனது நாயகன் பரமசிவன் தரும்படியான நலந்தேடி பெற்றுவந்த பாரிஜாத விருக்ஷமடி பெண்களா.

சத்தியபாமா கவி.

விதிப்படிசெங்கோலேந்தும் விண்ணவர்க்கரசிநீயே
பொதுப்பட்டசந்தனங்கள் புஷ்பம்தாம்பூலமென்பார்
எதிர்ப்படநாமெல்லோரும் யிருந்தியேகலந்திருக்க
சதிபடநீக்கியென்னை தருவணிந்ததைச்சொல்வாயே.

வசனம்.

அமுதாசனியாயிருந்து செங்கோலேந்தி தேவமுனி யாவருக்கும் பட்டத்தரசியே ஒன்று சொல்லுகிறேன் கேளும் சபையாருக்கு புஷ்பம் தாம்பூலம் சந்தனம் பன்னீர் பொதுப்பட யிருப்ப

தென்றும் பேதாபேதமில்லாமல் தருவிக்கும் தண்மையா யிருக்க நாமெல்லோருங்கூடி ஒருமித்து கலந்திருக்க யென்னை நீக்கி பாரிசாதத்தை தருவித்து நீங்கள் சூட்டிக்கொண்ட தென்று சொல்லும் இந்திராணியே.

இந்திராணி தரு-சுருட்டி.

உம்பர்முடிக்குந்தரு பூமிப்பெண்ணாகிய
உனக்குத்தகுமோபோடி பாமா சத்தியபாமா

சத்தி. இன்பதுன்பமரியாத யிந்திராணியேநீங்கள்
எனக்குமேலானதை கூரும் அதைகூரும்

இந்தி. குண்டலத்தேவர்கள் குலதெய்வமாகயெண்ணி
கொண்டாடும்பூலோகம் மாதே லோகமாதே

சத்தி. இடுக்கஞ்செய்தசூரனை வெட்டியிடாருத்த
என்னைக்கும்பிடவேணும் நீயே வேணும்நீயே

இந்தி. மட்டித்தனம்பேசாதே மாட்டிடச்சியென்னோடே
வம்புபேசாதேயெட்டபோடி யெட்டப்போடி

சத்தி. மாட்டிடச்சிசூரனை மடித்துவுன்னை ரக்ஷித்த
மார்க்கந்தெரியாததாசி போடிதாசி

இந்தி. தாசிதெப்படியென்னைக் குலதெய்வமாய்
வைத்தென்னுவுங்கள்சாதி வுங்கள்சாதி

5

சத்தி. இந்திரப்பத்தனுக்கு யெவர்கள்வந்தாலும் பெண்டா
இருக்குங்குணத்தைக்காட்டாதே நீ காட்டாதே

இந்தி. ஊரும்மோர்விக்கும் யிடச்சியாருக்குஞ்சொந்தம்
உண்மைதெரியும்வாயைமூடும் வாயைமூடும்

சத்தி. வாயைமூடி சூரனுக்கு பூலோகத்திலொளித்த
வள்ளலரியும்மெட்டபோடி மெட்டபோடி

இந்தி. கள்ளன் திருடனென்று கட்டுண்டடிப்பட்டு
கணவன்பெருமை இதுதானோ இதுதானோ

சத்தி. நறகாசூரனுக்கஞ்சி கள்ளன்காலில்விழுந்து
ராஜன்பெருமையைக்கொண்டாயோ கொண்டாயோ

இந்தி. குளிக்குந்துறையில்வந்து பெண்கள்சேலைதிருடி
கொண்டவன்பெருமை பேசாதே பேசாதே

சத்தி. அகலிப்பெண்ணை பிச்சிக்க ஆயிரம்யோனியானான்
அரசன்பெருமை இதுதானோ இதுதானோ

இந்திரன் வசனம்.

வாரும் தேவகன்னிகளா நம்மை யெதிர்த்துபேசிய பூலோக கன்னியை நமது சபையைவிட்டு அப்புரப்படுத்தி வாருங்களடி பெண்களா.

சத்தியபாமா தரு-கலியாணி.

சுவாமியிந்த பொன்னுலகத்துக்குவந்து
தலைகுனிந்தோட விதியாச்சே
வீராதிவீரியரே அதை விபறப்படவுமமக்கு
மேதினியோரறியச் சொல்லுவேன்
இந்திராணிதேவ கன்னிகளெல்லாம்
யெந்தனை அவர்கள் நீக்கியே
பாரிசாதமலர்சூடி பண்பாயலங்கரித்தார்
மதியாதவிதங்கண்டேன் வாரும்வாரும்நீரும்வாரும் (சு)

சத்தியபாமா வசனம்.

கேளும் நாதா யிந்திராணியும் தேவகன்னிகளுடனே நானும் கலந்திருக்க யென்னை நீக்கி மற்றஸ்ரீகளெல்லாம் கற்பக பாரிசாத புஷ்பங்களை சூட்டி அலங்கரித்தார்கள் நம்மை யீனசாதியென்றும் தாழ்ந்தவர்களென்றும் மதியாதிருப்பதினாலே அாக்ஷண மாவது

இங்கிருக்கக்கூடாது மேலும் பாரிசாதமலரானது இந்த தெய்வ லோகத்திலிருக்க தகாது அதை வேரோடு பிடுங்கிக்கொண்டு நமது பூலோகத்திற்கு போவோம் பிராணநாயகா.

கிருஷ்ணன் கந்தார்த்தம்-மோகனம்.

அடிக்கடிதேவருக்கு அனுதயாலேவந்த
இடுக்கத்தைதீர்த்துவந்த யென்தேவியென்றெண்ணுமல்
முடிக்கின்றபுஷ்பத்துக்கு முகம்வாடவேண்டாம்பெண்ணே
சடுக்கென தாவுக்கேகி.

தரு இந்துஸ்தானி-நாதனுமக்கிரியை.

தருவைநானெடுத்தேனே பாரிசாத தருவைநானெடுத்தேனே
தருவைவேரோடே நான்தான் தூக்கிதோள்மேலே
அருவையேதாங்கினேன் அச்சப்படுவதுண்டோ (தரு)

வசனம்.

இப்படியாக பகவானுனவர் பாரிசாத விருக்ஷத்தை வேரோடு கிளைந்து யெடுத்துவரப்போகின்ற சமயத்தில் அதைக்கண்ட காவலாளிகள் வருவது.

காவலாளி கவி-மோகனம்.

தேவனேயிவனாரப்பா திடிலென்றோடிவந்து
மாவெனபாரிசாத மலருடன்விருக்ஷமுள்ள
தாவினைபரித்தெடுக்க தடுத்தவன் தனைபிடிக்க
காவலவீரறெல்லாம் கடுகியேவருகின்றாரே.

தரு கலியாணி.

நாங்களே வனக்காவலாகுமே வனத்துக்கெல்லாம் (நாங்)
ஓங்கும்பாரிசாதத் தருவையெடுத்து நீ
ஓடிப்போகாதேவெல்ல தேடிவந்தோமேகொல்ல (நாங்)
தேவரோஆதிமூவரென்றாலு மடிப்போம் அஞ்சாமல்வந்த
தீரத்தைக்காட்டியிப்போ வுந்தனைமடிப்போம்
மேவுந்தருவை நீயெடுக்கமதிகெட்டு
மெல்லியுடன்வந்தாய் சொல்லுமுயர்தந்தாய் (நாங்)
சோதிமிருதியசூலம்வேலாயுத மெடுப்போம் சுயன்றவீரி
சுற்றிலும்நெருங்கியே குத்தியெமனுக்கிரைப்போம்

சேதியரியாமல் திருக்குடன் அகப்பட்டு
சிவனைப்பரிகொடுக்க காவனத்தையடுக்க (நாம்)

நீலமாமலைபோல்வந்திட கண்டோம் உந்தனைகண்ட
நெடியதண்டமும்வடிவா னிலம்புக்கொண்டோம்
காலகாலனும் நடுங்குமனுகாத
கட்டுக்கடந்தவுன்னை வெட்டவந்தோமுன்னே (நாங்)

கிருஷ்ணன் கவி.

விரும்பியதருவுக்காக மிரட்டுங்காவலரேகேளாய்
துரும்பினாலதையெடுத்து தூண்டவுமெரிவிளக்கை
சுரும்புபோய்த்திடுவதாக சூரங்கொண்டெதித்திடாமல்
திரும்பியேயுயிர்பிழைத்து சீக்கிரமாயேகுவீரே.

வசனம்.

அடடா காவலரே நானிச்சத்துருவுக்காக யெனது மகுத்துவ மரியாமல் அக்கினிதுரும்பானது யெதிர்த்ததுபோலவும் தீபச்சுடரொளியைக கண்டு வண்டுகளானது வீணிலே உயிரிழந்த பாவனையாகவும் நீங்கள் வந்தெதிர்த்து உயிரிழந்துபோகவேண்டாம் விலகி பிழையுங்கள் காவலர்களே.

காவலன தரு.

கள்ளனேஉன்னிடசவுரிய வீரம்காணவோ
கணைகளெடுத்துமே அமோகமாகதோணவே

சுருள். விள்ளவேவீரியங்காட்டுவோம்வெகுவிதசமரதுபூட்டுவோம்
விண்டலதேவரும் கண்டுகளித்திட
தண்டனை செய்யவும் கொண்டேனே சரமிதோ (கள்ள)

கிருஷ்ணன் தரு.

அதிபலசவுரியம்பேசி யெதிர்ந்திடும்வீரறே
அறிவில்லாமலே மடியக்காலமோதீரறே

சுருள். எதிர்லோபாசவுரியம் பேசாதே
எளிதயெண்ணியே வீசாதே
இப்பவேவுங்களை செப்பியயெமகிரி
கொப்பளசேர்க்கவும் தப்புவதுண்டோ. (அதிபல)

காவலன் தரு.

வீரியவார்த்தைகள் பேசுவதென்னதீரமோ
வெட்டிகெலிக்கவும் யெங்களுக்கென்னகோரமோ

சுருள். சூர்மாவே துள்ளாதே துண்டனேமீமதங்கொள்ளாதே
துண்டமுஞ்செய்யவே கொண்டுமோரமிதோ
மண்டலம்நிரையவே அண்டருமகிழ. (வீரிய)

கிருஷ்ணன் தரு.

மாயவனென்றுமே மதித்திடாமலே மூடரே
வந்துயெதிர்த்திடும் யிந்திரன்குடிகேடரே

சுருள். சாயவேயுங்களைசாடவே தத்திபயந்துமேஓடவே
தட்டியேயுங்களை பட்டுமேவிழவும்
வெட்டிகெலிக்கவும் அட்டிகளுண்டோ. (மாயவ)

காவலர் கவி

மகாதேவர்வந்தாலென்ன மாயவன் வந்தாலென்ன
செகத்தரசர்கள்வந்தாலும் சேர்க்கவொட்டாமல் காவல்
புகலவும்இந்திரதேவன் பொரிந்திமேயகாவல்தாண்டி
பகவானுமானலச்ச படுவமோவிடுவதுண்டோ.

வசனம்

பிரம்மா விஷ்ணு யீசுவான் முதலான பேர்யாவரும் அணு காமல் யிந்திரதேவன் யெங்களைகாவல் வைத்திருக்க நீயோபாரி சாதத்தருவை திருடக்கண்டு பிடித்தோம் நீமாயவனென்று சொன்

னூல் நாங்கள் அச்சப்படுவமோ உன்னை நிமப்பொழுதில் மடிக்க பாணமெடுத்தோம் பாரும்மகாராஜனே.

கிருஷ்ணன் தரு.

பஞ்சாயுதனும்நானே உங்களையெல்லாம்
பஞ்சுபோல் பரக்கடிப்பேன்
அஞ்சாமலேயெதிர்த்து ஆனுவந்தனையடக்கி
ஆடியெல்லாரையும் வாட்டிபூட்டினேன் சரங்கள்கோடி. (பஞ்)

காவலன் தரு.

கண்டவர்மனம்நடுங்கவே வீரவாளிதை
கொண்டேநமன் ஒடுங்கவே
துண்டாயுன்னை யுந்தாக்கியே சரங்கள்கோடி
சூரமுண்டுவுன்னைக்கொல்ல நேரமுண்டோகண்டறிய (கண்ட)

கிருஷ்ணன் தரு.

ஓடாதோட அடிப்பேன் உங்களையெல்லாம்
நாடாமல்வாட மடிப்பேன்
வாடாயுங்களையெல்லாம் வாட்டியெமதகிரிக்கி
மாந்தவேசேனைமிகுத்து துாக்கினேன் சரங்கள்கோடி .(ஓடா)

காவலன் தரு

வீராதிவீறர்மதிக்க காவலரெல்லாம்
வில்லெடுத்தவர் துகுதிக்க
ஆராலும் செயிக்காத அனுவந்தனையரிய
அச்சமத்தவந்தோமிதோ மெச்சவுமெந்தனைக்கண்டு (வீராதி)

கிருஷ்ணன் கந்தார்தம்-மோகனம்.

அவரவர்வந்தெதிர்த் தவரியாதனுயெடுத்து
தவரவேசரந்தொடுத்து

தரு.

எவரும்சிதர அடித்தேன் சிரமிகுத்து எவரும் சிதர அடித்தேன்
எவரும் அபயமிட்டுயேகவே இந்திரதேவன் அவருமே
கீர்த்திகள் அச்சுது வாச்சுதென்று (எவரும்)

பொது வசனம்

இப்படியாக கிருஷ்ணமூர்த்தியை காவலாளிகள் வந்தெதித்து காவலாளிகளை ஸ்வாமியானவர் சின்ன பின்ன மாயடிக்க அந்த காவலாளிகள் ஓடிவந்துதேவேந்திர மகாராஜனைக்கண்டுசொல்வது.

காவலர் வசனம்.

சரணம் சரணம் தேவேந்திர மகாராஜனே துவாரகாபுரி கிருஷ்ணனை தேவமகாராஜ ஞனவர் பாரிசாத விருக்ஷத்தை வேரோடு பிடுங்கிக்கொண்டு போகும் போது நாங்களதைதடுக்க எங்களைசின்னாபின்னமாயடித்து ஓட்டி விட்டாரையா சுவாமி.

தேவேந்திரன் கவி-தோடி.

மேலோர்கபுதனிவிருந்து விருக்ஷத்தைபரித்துக்கொண்டு
பூலோகம்சேர்க்கொணுது போர்செய்து அதைதடுக்க
மால்ாகயிருந்தாலென்ன வரும்படையுடனே நானும்
ஆலோலமாகவந்தேன் அய்யனே நில்லுநில்லும்

வசனம்.

மேலுலகத்தி லிருக்கும் பாரிசாதத் தருவை கீழுமேலாகியபூலோகம் சேர்ப்பிக்கவிட மாட்டோம் நீவிஷணு வாயிருந்தாலும் யிவ்வேலை அஞ்சமாட்டேன் நில்லும்நில்லும் மாயவரே.

கிருஷ்ணன் தரு அடாணு.

வாடாவாடாயிந்திரதேவா யெதித்துநீவந்தால் (வாடா)
மேடானமேடியென்றும் விண்ணோர்க்கதிபனென்றும்
தடாண்மையாகவே சண்டைக்கிதுணிந்தாயோ (வாடா)

தேவேந்திரன் தரு.

போகாதேநில்லும் நில்லும் மாயானே தருவைக்கொண்டு (போ)
ஆகாதுயெனக்கிந்த ஆணுவம்நிலைக்காது
சாகாதவரமுண்டு சமர்த்தும்படையுமுண்டு (போகா)

கிருஷ்ணன் தரு.

ஆராலேவந்தசெல்வமிந்திரா இப்படிபேச (ஆராலே)
மாராமலமூர்தமும் மகிழ்ந்துங்களுக்குதந்து
சூராதிசூறரைதுணித்து செயந்தந்து (ஆராலே)

தேவேந்திரன் தரு.

எல்லாமளித்ததிருக்கையா செல்வம்சிறப்பும் (எல்லா)
சொல்லாலுயர்ந்ததிரு சொற்கலோகந்தனைவிட்டு
நல்லார்பூமிக்கிப்போக நாங்கள்விடுவதுண்டோ (எல்லா)

57

கிருஷ்ணன் தரு.

கொண்டுபோகாமலிருப்பேனே உங்களுக்கு (கொண்டு)
சண்டைசெய்யவந்தீரகளோ சமர்த்தைநானிந்தவேளை
கண்டறியவேவேணும் மணவேவசிசரத்தானே (கொண்டு)

தேவேந்திரன் தரு.

தேவர்படைகள்மீருதிப்போ தனுவெடுத்து (தேவர்)
தாவுந்தருவைவிட்டு சந்தோஷமடையாமல்
போவதென்னமோமீரி போர்செய்யதுணியாமல் (தேவர்)

கிருஷ்ணன் தரு.

சாரங்கவில்லையெடுத்தேன் சரங்கள்பூட்டி (சாரங்க)
வீரங்கள்பேசியே தேவரெல்லாம்பரக்க
வீரத்தையழித்தேனே வேடுண்டுபோமிந்திரா (சாரங்கா)

தேவேந்திரன் தரு.

வச்சிராயுதத்தையேவினேன் உன்னை கண்டிக்க (வச்சிர)
வச்சிராயுதமும்மைவலம் வந்துதெண்டனிட்டு
கச்சிதமடங்கவேகைகொட்டி நகைத்தேனே (வச்சிர)

85834

கிருஷ்ணன் வசனம்.

அடாவாடா யிந்திரா என்னை யெதிர்த்து வந்த தேவப்படை களை யெல்லாம் டரக்கடித்து யிருக்க நீ விட்ட அஸ்திரமெல்லாம் பொடிப்பட்டிருக்க உனக்கு உரிதியாயிருக்கும் வச்சிராயுதத்தை யேவ அதுயென்னை பணிந்திருக்க நீ அபசெயபட்டாயல்லவா யெனக்கு தோர்வையான உனக்கு நாணமில்லாமல் மகா கெலிப் புடனே கைகொட்டி நகைப்பதென்ன சொல்லும் யிந்திரா.

தேவேந்திரன் வசனம்.

கேளுமையா சுவாமி கர்த்தனே உம்மையாராவது கெலித்தி ரிந்து நான் கெலிக்காவிட்டால் யெனக்கு நாணமுண்டு உம்மை பர மசிவன் முதலான யாவரும் வெல்லப்படாத வல்லவராச்சுதே உம் மிடத்திலே நான் அபசெயப்பட்டால் அதனால் யெனக் கென்னபங் கம் சொல்லுமையா சுவாமி கர்த்தனே.

கிருஷ்ணன் வசனம்.

அடாவாடா யிந்திரா யிந்தபாரிசாத விருக்ஷம் முன்னிருந்த மிடத்திலேதானே வீசிவிட்டேனப்பா தேவேந்திரமகாராஜனே.

தேவேந்திரன் கவி.

ஆயனேயடியேன்செய்த அபகாரம்பொருத்தாள்போற்றி
மாயனேபூமிவிட்டுவரும்போது தருவுமிங்கே
தூயனேதருவதாகசொல்லியே மகிழ்ந்தளித்தேன்
வாயனேவெண்ணெயுண்ட வாமனுபோற்றிபோற்றி.

வசனம்.

வாருமையா சுவாமிகர்த்தனே திருலோகத்திலும் தேவரீரை செயமடைந்த வர்களில்லையே அடியேன் அதைச்குறித்து யென்மன தில் நகைப்பு வந்தது இந்தவேளை யென்மீதில் கோபம்செய்யாமல் காப்பாத்த வேண்டும் கர்த்தனே.

மங்களம்-கணேசருக்கு-மங்களம்.

ராமசந்திர ரகுவீர ஜெய ஜெய ராமசந்திர ரகுவீர ஜெய ஜெய
ஆஞ்சினேய கபிராய ஜெய ஜெய ஆஞ்சினேய கபிராய ஜெய ஜெய

சந்திரசூர்யசிவ சாம்ப ஹரஹர சந்திரசூரியசிவ சாம்ப ஹர ஹர
ராமமஹிம்பிணித பால தயய தயய தயா யதா (ராம)

விமலகமலவிதுலசரண நித்தியானீகீர்த்திஹரண
கலைய கலைய காலைய காலைய (ராம)

அம்சதீனஅம்சஹரண அம்சாதிபுஜகசயன
சுதய சுதய சூதய சூதய. (ராம

நரகாசூரன் சண்டை நாடகம்.

85834

முற்றிற்று.

0-89:2M.N
N11